[illegible]

V 6 NO. 45 16 NOV 1933.

JL

[illegible]211, N28 K.N

N33.6.45

189169

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 6] 1933 ஹு நவம்பர் மீ 16உ [No. 45

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 805
2. அப்பர் (64 கலை-வியாகரணம்-எழுசீர் எண்சீர்ச் சந்த விருத்தம்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 807
3. ஞான தீபம்
T. R. இராஜகோபால் 809
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 810
5. காற்றுமழை (அங்கம் 5. களம் 1.)
Shakespeare's Tempest 812
6. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி 814
7. கலித்தொகை (பாலைக்கலி, 34)
T. A. கனகசபாபதி முதலியார் 816
8. யாப்பிலக்கணம்—(வண்ணம்)
வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 817
9. கம்பராமாயணம் (அயோமுகிப் படலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 818
10. வர்த்தமானம் 820

கலா நிலயம்

யானையை விளம்பித் தேரையை யியற்றல் 2.

18969

உயரிய கொள்கைகளைக் கருத்துட்கொண்டு அவைகளின்பொருட்டு முயலவேண்டுமே யல்லாமல், உணவிற் கென்றும் உடைக் கென்றும் சிறிய காரியங்களை அரசியல் அமைப்புக்களால் சாதிக்கமுயல்வதிற் பயனில்லை என்பதை ஜோஸப் மஸ்ஸீனி செவ்விதின் எடுத்தியம்பினர். மானுட அன்பிற்கும் கடவுள்பக்திக்கும் நம் கருத்தை உயர்த்தும்படி முயலுங்கள் என்கின்றார் அவர். மற்ற முயற்சிகளெல்லாம் செய்துசெய்து பயன்பெறுமற் கிடப்பதுகண்டும் எற்றுக்கோ அவைகளை இன்னும் பற்றி யுழல்கின்றீர் என்று அவர் கேட்கும்போது வித்தகமே உருவெடுத்து வந்து இவ்வாறு பேசுகின்றதென்று நாம் எண்ணும்படி யிருக்கின்றது. "கணக்கெடுக்கும் எந்திரங்களாகமனிதரைமாற்றாதீர், தருமசிந்தனையை எழுப்பிக்கொள்ளுங்கள்" எனச் செப்பும் இது இயேசுகிறிஸ்துவின் மொழிகளோடு இணங்கவல்லதாம், புத்தர் மொழிகளோடு பொருந்தவல்லதாம். இவை மிகப்பெரிய மொழிகள்; ஆனையிற் பெரியன. உண்மையே இது. தருமத்தை நினையாமல் வேறு சில வகைகளில் முன்னேற்றமடைய முயன்றவர்களில் யாரேனும் எவ்விடத்தும் உருப்பட்டதில்லை என்று இவர் எடுத்துக்காட்டுவதன் வாய்மையோ ஒருபோதும் மறக்கற்பாலதன்று. எனினும் இவர், எல்லோரும் எங்கெங்கும் ஏற்றுக்கொள்வதற்கு உரியனவென்று சிறப்பாகக் கூறுகின்ற கொள்கைகளைக் கருதுங்கால், இவ் வுண்மைகளை உணர்ந்துதான் சொன்னாரோ, அல்லாது, தான் செய்யச் சொல்லவருகின்ற சிறிய காரியங்கள் பெரியனபோல் தோன்றும்பொருட்டு அப் பெரிய மொழிகளால் சனங்களை வஞ்சிக்கப் புகுந்தாரோ, வேறு தான் யாதோ, எனத் தெரியாமல் திகைக்கவேண்டி நேர்கின்றது.

இவைகளை நினைவில்வைத்துக்கொண்டு இனி இவர், எல்லோரும் கருத்துமுற்றத் தோய்ந்திருக்கவேண்டியதென்று கூறுகின்ற கொள்கைகளிலொன்றைச் சிறிது சோதிப்போமாயின், பெரியன விளம்பிச் சிறியனவே செய்துவைக்கப் புகுகின்ற வோர் நல்லதல்லா விந்தையின் தன்மை தெரியவரும். உண்பதற்கும் உடுப்பதற்கும் உரியவைகளை அரசியல் முறைகளால் அமைப்பதே கருமம் என்று கிடக்காமல், அன்பையும் கடவுளையும் அடையத்தக்க கொள்கைகளையே மேற்கொண்டு, தன்தேயம் தன்சாதி தன்இனம் என்ன இயம்பாமல், உலகமடங்கலும் ஒருங்கே இன்புற உய்யும்படி எழுந்து உயருங்கள் என்று ஓயாமல் உரைத்துவருகின்ற இந்த ஜோஸப் மஸ்ஸீனி, "சனங்களில் ஒவ்வொருவருக்கும் வயிற்றுப் பிழைப்பிற்கு வழி செய்யவேணும், அல்லது அவ் வயிற்றுப் பிழைப்பிற்காக வேலை செய்யும் வசதியை அளிக்கவேணும் அரசாங்கம் கடமைப்பட்டிருக்கின்றது, என்னுங் கோள்கை சனங்களின் இதயத்தில் வேரூன்றவேண்டும்" என்று சாற்றுகின்றார். கடைசியில் இந்தச் சிறுகொள்கையைச் செய்யத்தானா அத்தனைபெரியவிளம்பரம்! அன்பையுங் கடவுளையும் அத்துணை அழைத்தவர், இறுதியில், வயிற்றுப் பிழைப்பிற்கு வழிசெய்யுங் கடமையை அரசாங்கத்திற்கு அமைப்பதிற்றானே ஒரு கொள்கையைக் கூறக்கூடியவராயினர். இந்தச் சிறு தேரையைச் செய்வதற்கா அத்தனை பெரிய யானைகளை விளம்பவேண்டியிருந்தது. பசித்திருப்பவர் யாவராயினும் இத்தகைய

32
M28 M33

பேச்சுப் பேச வல்லவர்களே. கடவுளேனும் அன்பே னும் மற்று, எதனைச் சார்ந்த எவ்விதக் கொள்கையே னும், இதற்கு வேண்டாவே. பசித்திருப்பவரும் பேசு வார்; பசித்திருப்பவரைப் பேசிப்பேசி, அதனைத்தணி விக்கவேண்டுமென்னும் எண்ணம் சிறிதும் இல்லாமல், தாம் பொதுஜனத் தலைவர்களாக விரும்புகின்றவர்க ளெல்லாரும், அரசாங்கத்திற்கு இக் கடமை உண்டு என்று இடைவிடாமல் இயம்புவார்களே. அவரவர் தாமே செய்யக் கடமைப்பட்டிருப்பதை அரசாங்கத் தின் தலையில் சுமத்துவதுபோன்றதோர்புன்மைவேறு இல்லை—இதனையே இராஜத்துரோகம் என்று கூற வேண்டும். கிண்டிக்குதிரைப்பந்தயத்திற்குப்போகின்ற ஒவ்வொருவனும், 'கிரிக்கெட் மாச்சிற்குப்' போகின்ற ஒவ்வொருவனும், சினிமாவிற்கும் நாடகக் கொட்ட கைக்கும் போகின்ற ஒவ்வொருவனும், 'காப்பி ஒட் டலி'லிருந்து திரும்புகின்ற ஒவ்வொருவனும், வழி தோறும்வந்து தன்னைச்சூழ்ந்துகொள்கின்ற பிச்சைக் காரர்களுக்கு ஒரு காலணா கொடுப்பதற்குப் பதிலாய் மஸ்ஸொலினியின் கொள்கைக்கு இலக்காகி நிற்கின்ற அரசாங்கத்தின் இக் கடமையையே வேருன்றும்படி பாடம் படித்துவிட்டுச் செல்கின்றான். தத்துவம் வித் தகம் எல்லாம் இத்தனையோ! அரசாங்கத்தின் கட மை என்னும் வாய்பாட்டில் இக்கொள்கையின் வாச கம் அமைந்திருக்கின்றதானாலும், உண்மையில் சனங் களைநோக்கி, "உங்களுக்கு இவ்வுரிமை உளது, இத னை வற்புறுத்துவதற்குரிய புரட்சிகளைச் செய்யுங்கள்" என்பதே இதன் பொருள். இதனையே மஸ்ஸொலினி வெ ளிப்படையாகச் சில இடங்களிற் கூறியுமிருக்கின்றார். உலகம் உய்யவேண்டுமாயின், அன்பையுங் கடவுளை யும் அடையவேண்டுமாயின், உரிமையின்பொய்ம்மை யன்றோ உறவுற உணர்ந்துகொள்ள வேண்டியதோர் கொள்கையாகின்றது.

அரசாங்கத்தின் கடமையாமே! இதற்கெதிர், 'சன ங்களில் ஒவ்வொருவரும் பிறரது வயிற்றுப் பிழைப் பிற்கு வழிசெய்யவேண்டிய கடமையுடையவர்' என்ற தருமத்தையே கொள்கையாகக் கூறினாலோ! அப்புறம் அரசாங்கமும் வேண்டா, வேறு சில ஆரவாரங்களும் வேண்டாவே. மற்றவர் கிடக்க, அம் மஸ்ஸொலினிக்கு ஏன்தான் இது தோன்றவில்லையோ. ஜனங்கள் இந்தக் கடமையை அறியாமையாலோ, அல்லது பெரும்பா ன்மை அறிந்தும் செய்ய மறுப்பதாலேயோ, அரசாங் கங்களெல்லாம் அமைக்கவேண்டியிருக்கிறது. "ஜனங் களே, நீங்கள் கெட்டவர்களா யிராமல், எல்லாவகை களிலும்நல்லவர்களாகிப் பின் அரசாங்கத்தையே அனு வசிய மாக்கிவிடுங்கள்" என்று கூறத் துணிவார் ஒரு வர் இல்லையா? "நாங்கள் ஒருபோதும் நல்லவர்கள் ஆகவே மாட்டோம்" என்று சத்தியம்செய்துவிட்டே பிறகு சனங்கள் அரசாங்கத்தின் கடமைகளைக் கற் பிக்கப் புகுகின்றார். நல்லவர்கள் ஆகாராயின் பிறகு அந்தச்சனங்கள் வயிறுதான் பிழைப்பானேன், உயிர் தான் வாழ்வானேன். சனங்கள் கெட்டவர்களாயின் அவர்களே இல்லாமலொழியலாம், அன்புங்கடவுளும் பின்பற்றிய நல்லவர்களாயின் பின் அசாங்கம் ஒன்று வேண்டா. அரசாங்கம் வேண்டுபவர் வேறு சில பேசு வதற்கு ஒரு வாய் எங்ஙனம் பெற்றார். "அரசாங்க மும், நமது உடையைப்போல், நாம்நம்முடைய தூய் மையை இழந்தோம் என்பதற்கே அடையாளம்"—(Government like dress is the badge of our lost innocence)—என்று மேனாட்டறிஞர் ஒருவர் கூறியிருப்பது முற்றிலும் உண்மையே.

இங்ஙனம், அன்பென்றுங் கடவுளென்றும்பலபல விளம்பி, கடைசியில் வாய்ச்சோற்றின் உரிமைக்கே செய்யச்சொல்லும் வழக்கினோர் ஜோஸப் மஸ்ஸொலினி ஒருவரேயல்லர். இதனைத்தான் ஆனையைவிளம்பித்தே ரையை யியற்றல் என அழைக்கலாம். இந்தச் செய்தி யைக் கம்பர், இராவணனால் களியாட்டங் காணப்பெ ற்ற கணிகையர்பால்,

> ஏனைய பிறவுங் கண்டார்க்
> கிந்திர சால மென்னத்
> தானவை யுருவிற் றோன்றும்
> பாவனைத் தகைமை சான்றோர்
> மானமர் நோக்கி னாரை
> மைந்தரைக் காட்டி வாயால்
> ஆனையை விளம்பித் தேரை
> அவிநயத் தியற்றி யிட்டார்.

[அவிநயித்துக் காட்டுகின்றவைகளைக் காண்பவர்க்கு இந்திரஜாலம்போல் உருவெடுத்துக்கண்ணுக்குஎதிரேவந் தனபோல் தோன்றும்படி பாவனைகள் காட்டுவதில் திற மைவாய்ந்த அக் கணிகையர், மான்போன்ற கண்களையு டையமாதர்களையும் ஆடவர்களையும் பற்றிய செய்திகளைத் தாம் அவிநயிப்பதாகத் தெரியப்படுத்தி, அதனை விளம்பும் போது வாய் ஆனையெனக் கூறி, பிறகு அபிநயம் செய் யும்போது, அவர் அவிநயிப்பதெல்லாம் தேரையேயாகத் தோன்றும்படி செய்துவிட்டார்]

என்று மெய்யுறச்செவ்விதின் எடுத்துக்காட்டுகின்றார். இதனோடு இம்மடவார் குடித்திருந்த கள்ளின்தன்மை யை முன்னர்,

> நற்பெருங் கல்விச் செல்வ
> நவையறு நெறியை நண்ணி
> முற்பய முணர்ந்த தூயோர்
> மொழியொடும் பழகி முற்றிப்
> பிற்பய னுணர்தல் தேற்றாப்
> பேதைபோல் வஞ்சன் செய்த
> கற்பனை யென்ன வோடிக்
> கலந்தது கள்ளின் வேகம்.

[நல்ல பெரிய கல்விச்செல்வத்தின் குற்றமற்ற வழி யைப் பின்பற்றி, அதன் முதன்மையான பயனை உணர்ந் திருந்த தூய்மையாளர்களின் (பொருளைச் சிந்திக்காமல்) மொழிகளோடு மாத்திரம் பழகி முதிர்ந்து, அக் கல்வியி னால் விளையவேண்டிய பயன்களை உணரமாட்டாதவன் போலும், வஞ்சகர் செய்த கற்பனைகள் போலவும், அக்கள் ளின் வேகம்புகுந்து அக் கணிகையர்மனத்தில்கலந்தது.]

என இயம்பியிருப்பதையும் நோக்குங்கால், மெஸ் ஸொலினி போன்றவர் ஆனையை விளம்பித் தேரையை இயற்றுவதன் காரணமுந் தெரியவரும்.

தேரையே விளம்பித் தேரையையே செய்தால் தீது பெரிதில்லை. அப்பொழுது சிறியதைச் சிறியதென்றே அறிந்து அவ்வளவிலேயே அதனைச் சனங்கள் உவப் பார். பெரியன என்னவென்பதேனும் தெரிந்திருப்ப வர் சிறியன சிந்திக்குங்காலையில், கனியிருக்கக் காய் கவரும் தம் மதியின் திறத்தையும் மானநிலையையும் அயிர்ப்பினும் அயிர்க்கலாம். ஆதலின், முதலில் உயரிய பயிலாவிடத்தும், காலம்தாழ்ந்தேனும் ஒருநாள் அவர்

மனம் தேரையைவிட்டு யானையை நாடலாம். அந்தநன் மையைச் சனங்கள் எந்நாளும் எய்தாவண்ணம் வழி யை அடைத்துவைப்பவர் மஸ்ஸொலினி போன்றவர்க ளே. அன்பு வாய்மை கடவுள் தூய்மை அனைய சொற் களை இன்னவர் இடைவிடாமல் விளம்பிவருதலால் சனங்கள், உத்தமரில் உத்தமர் இவரை ஒப்பார் யார் என மதித்து வியப்புமீதூர வாய்பார்த்து நிற்கின்ற னர். பெரிய சொற்கள் சில அவர் வாயினின்று வந்து விட்டபடியால், இனி அவர் செய்கின்றவைகளெல் லாம் பெரிய காரியங்களே என்னும் மயக்கம் ஏற்படு கின்றது. இம் மயக்கத்தினின்று தெளிந்துகொள்ள வல்ல ஆராய்ச்சியும் நுண்ணறிவும் பொதுஜனங்கள் பால் எதிர்பார்ப்பது அரிது. ஆதலின், தேரையே ஆனை யென்ன உழக்கி உழக்கி உலக வாழ்க்கையை இழித்துவிடுகின்றனர். இந்நாள் நம்மைப் பிய்த்துத் தின்னும் பாதகம் இது.

இந்த மயக்கத்தினின்று மனிதரைத் தெளிவிக்க வல்ல நன்மை கலைகளின் இடத்தே யுளது. கலைநலங் கனிந்த புலவர்கள் ஆனையை விளம்பினாரெனின் பின் ஆனையையே செய்தமைப்பார். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என விளம்பப்பெற்ற ஆபுத்திரன், பின், "மன்னுயிரோம்பும் இம்மாபெரும் பாத்திரம் என்னுயிரோம்புதல் யானோ பொறேன்" என்று முடி யும்வண்ணமே சீத்தலைச்சாத்தனார்தம் கலைபொலிந்த கண்களுக்குத் தோன்றும். அதனைக் காண நமக்கும் கண்க ளளிக்கின்றார். ஆதலாலன்றோ கலைகளின்பால் நம் கருத்தைச் செலுத்தும் காரியத்தது இக் கலா நிலயம்.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[796-வது பக்கத் தொடர்ச்சி]

V. எழுசீர்ச் சந்த விருத்தம்

எழுசீர்ச் சந்தவிருத்தத்தின் முக்கியவகுப்புக்கள் நான்கே யாகும். அவை யாவும் வடமொழியிலிருந்து எடுத்து நமது முன்னோர்களால் பயன்படுத்தப் பட் டன; அவையாவன:—

(1) திருச் சந்தவிருத்த வகுப்பு:—அதாவது மூன்று மாத்திரை அளவுள்ள ஏழு சீர்களும், அடியினது அந் தத்தில் ஒரு நெடிலோசையும் பெறுவது. இது இரு வகை. ஒரு நெடிலும் ஒரு குறிலுமாய் ஆறுசீர்களும், ஏழாஞ்சீர் நெடிலீற்றுக் கூவிளமாயும் நிற்பது, சுகந்தி எனப்படும். இதனில் ஒரு சீர் குறையப்பெற்ற அறு சீர்ச் சந்தவிருத்தம் முன்னர்க் கூறப்பட்டது. பின்னு மொரு சீர் குறைந்தால், சேணி யென்னும் சந்தக்கலித் துறை யெனக் கண்டோம்.

சுகந்தி விருத்தம்போல் யாவும் தேமாக்களால் ஆக் கப்படாமல், மும்மாத்திரை புளிமாச்சீர்களும் விரவி வருமாயின் அதற்கு உத்சாகம் என்னும் பெயர் தரப் படும். இவ் விரண்டு வகைகளும் திருமழிசையாழ் வார் திருச் சந்தவிருத்தத்திலும், சிவவாக்கியர் பாடல் களிலும் காணலாம். *திருச்சந்த விருத்தமென்பது, (திருவிருத்தம்போல்) முதல் முதல் தமிழில் எடுத்தா ளப்பட்ட சந்த விருத்தமாகும். இதைத் தமிழ் விரக ரானபுகலிவேந்தர் தமிழ்த்தன்மையாக்கியே, பின்னர்த் தம்முடைய பாடல்களிற்பயன்படுத்தினார். அவற்றின் உதாரணம்:—

சுகந்தி

> அஞ்சு மொன்றி யாறு வீசி நீறு பூசி மேனியில்
> குஞ்சி யார வந்த செய்ய வஞ்ச லென்னி மன்னுமூர்
> பஞ்சியாகுமெல்லடிப்பணைத்தகொங்கைநுண்ணிடை
> அஞ்சொ லார ரங்கெ டுக்கு மந்த ணாரூ ரென்பதே.
>
> —திருவாரூர் - திருவிராகம் - பண் - நட்டராகம் 4.

உத்சாகம் (உ - ம்)

> சண்ட வாயு மந்த மாக வடவை
> யங்கி தண்ணெனச்
> சண்ட பானு மதிய மொப்ப
> மொய்த யங்கு தென்றிசைச்
> சண்ட(ன்) வீறு சாந்த மெய்த
> வெஞ்சி னந்த லைக்கொ ளீஇச்
> சண்டி கைத்த லைவி யோடு
> தலைவ னங்க ணெய்தினன்.
>
> —காஞ்சி புராணம் - தக்கீசப் படலம் 35.

ஆகத் திருச் சந்தவிருத்தம் தமிழில் இருவகைத்து.

(2) ஏழு விளச் சீர்களாலும், அந்தத்தில் ஒரு நெடில் பெற்றும் வருவது. இத்தகைய சந்த விருத் தம் மூன்று வகையாம். ஏழு சீர்களும் கூவிளச் சீர்க ளாய் வருவதை மானினி என்பர். கூவிளச்சீர்களோடு கருவிளச்சீர்கள் கலந்து வருவதும், அதில் முதலசை நிரையாய் வருவதும் கவிராச விராசிதம் எனப்படும். கூவிளச்சீர் முன்னும் கருவிளச்சீர் பின்னுமாகக் கூடும் விருத்தங்களைச் சாத்துவி என்பர். ஆக இப்பகுதியில் மூவகையே. மானினிக்கு உதாரணம்:—

> கூவிள மேழுகு லாவநெ டிற்கடை
> கொள்வது மானினி நேரசைசே
> ராவிள மாதிந டப்பது பேர்கவி
> ராசவி ராசித மென்றனரால்
> கூவிள மேகரு வார்விள மேயிவை
> கூடுவ சாத்துவி காசுலவும்
> பூவிள வெம்முலை யாமமு தாருரு
> பொற்குட மேந்துபொ லன்குழையே.
>
> —விருத்தப்பாவியல்.

இவ்வுதாரணம் மூன்று வகைக்கு மாகாமையால், கவிராச விராசிதம் சாத்திவி, இவைகள் நமதிலக்கியத் தில் வந்துழிக் கண்டுகொள்க. இவ்வகை விருத்தங்கள் அப்பர் தேவாரத்தி லில்லை.

(3) மணிமாலம்

இது நமதிலக்கியத்தில் கொண்டாடப்பட்ட ஒரு வகைச் சந்த விருத்தமாகும். நான்கு, இரண்டு, ஆறு

*Tiruchandavirutham means the Sanda Virutham as it was the only Tamil Sanda Virutham, at the time of the introduction of Sanskrit Sandam in Tamil.

ஆகிய இந்த மூன்றிடங்களில் குறிலீற்றுத் தேமாவும், முதல்சீர், மூன்ருஞ்சீர், ஐந்தாஞ்சீர் ஆகிய விடங்களில் குறிலீற்றுப் புளிமாங்காயும், ஏழாமிடத்தில் புளிமாவும் வருவது இதன்விதி என்பார் விருத்தப் பாவியல் ஆசிரியர்:—

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்டன்
நடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி யும்ப ருலகங்க டந்த
வுமைபங்க னெங்க ளரனூர்
களிமண்டு சோலை கழனிக்க லந்த
கமலந்த டங்கு மதுவில்
தெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடுந்
திருமுல்லை வாயி லிதுவே.

—சம்பந்தர் - தென் திருமுல்லைவாயில்-பண்-பியந்தைக் காந்தாரம் 7.

ஆயினும் முதலிடத்தில் புளிமாங்காய் வருதற்குப் பதிலாய்த் தேமாங்காயும் வருவதுண்டு; மேற்கண்ட சம்பந்தர் பதிகத்தில் மற்றச் செய்யுட்களை நோக்குக; அவற்றில், 3,4,5,6,7, 9 ஆகிய அந்த ஆறு பாசுரங்களும் தேமாங்காயை முதற்சீராகப் பெற்றன. கம்ப ராமாயணத்திலும் அவ்வாறே சில விடங்களிற் காணலாம். (உ - ம்)

இத்தன்மை யெய்து மளவின்க ணின்ற
விமையோர்க ளஞ்சி யிதுபோ
யெத்தன்மை யெய்தி முடியுங்கொ லென்று
குலைகின்ற வெல்லை யிதன்வா
யத்தன்மை கண்டு புடைநின்ற வண்ணல்
கலுழன்ற னன்பின் மிசையாற்
சித்தங்க லங்கு மிதுதீர மெள்ள
விருளூடு வந்து தெளிவான்.

கம்பராமாயணம் - யுத்தகாண்டம் - நாகபாசப்படலம்.

(4) மத்த கோகிலம்

மூன்று மாத்திரைத் தேமாச்சீரும், நான்கு மாத்திரைக் கூவிளச்சீரும் மாறிமாறிவந்து இறுதியில் நெடிலோசை பெறுவது:—

மேலெ னக்கெதி ரிவ்லை யென்றவ
ரக்க ளூர்மிகை செற்றதீப்
போலி யைப்பணி யக்கி லாதொரு
பொய்த்த வங்கொடு குண்டிகை
பீலி கைக்கொடு பாயி டுக்கிந
டுக்கி யேபிற(ர்) பின்செலும்
சீலி கட்கெளி யேன லென்றிரு
வால வாயா னிற்கவே.

—சம்பந்தர் - திருவாலவாய் - பண் - கொல்லி.

இதில் முதற்சீர் மும்மாத்திரைப் புளிமாவால் ஆக்கப்படுவது முண்டு. மேற்கண்ட உதாரணத்தில் 3-ம் அடியில் (ர்) என்பது ஒலியோங்காத இடையெழுத்தாதலால் இசையில் "யேபிறர்" என்பது "யேபிற" என்பதுபோல் நான்குமாத்திரை அளவே பெறும்.

ஆக மேற்கண்ட நான்கு வகைகளே எழுசீர்ச் சந்த விருத்தத்தில் இருக்கின்றன.

VI. எண்சீர்ச் சந்த விருத்தம்.

நாற்சீர் இரட்டியாமல் வருகின்ற எண்சீர்ச் சந்த விருத்தம் தமிழில் ஒரே வகைதான் காணப்படுகின்றது. இதனைப் பியந்தைக் காந்தாரமென்னும் பண்ணில் தேவாரத்தில் காணலாம். இதன் வாய்பாடாக விருத்தப்பாவிய லாசிரியர் கூறுவது, விதிவிலக்காயும், யாப்பில் வழுவமைதி யெனக் கொள்ளவேண்டிய பல்வகைச் சந்த விருத்தங்களுக்குப் பொதுவிதியாயும் அமைந்தது போலும். எண்சீர்ச் சந்த விருத்தத்திற்குப் பின்வருமாறு உதாரணவிதி கூறுகின்றார்:—

அழிவறு காய மீட்டி மடமாந்த ருய்ய
வருநூல மைந்த பெரியோர்
மொழிதரு சந்த முற்று மியலின்ன தென்று
மொழிவா னெடுத்த லரிதே
கழிபெரு வாரி நீர தநுபற்றி யீங்குக்
கழறுற்ற சந்த விதியை
விதியென வைத்து மற்ற மொழியாத சந்த
விதிதம்மை யோர்ந்து கொளவே.

இத்தகைய* எண்சீர்ச் சந்த விருத்தம் திருநாவுக்கரசு நாயனர் தேவாரம் (4-ம் திருமுறையில்) பொது-சிவனெனுமோசை யென்னும் பதிகத்திலும், பொது - தசபுராணம் என்னும் பதிகத்திலுங் காணலாம். இதன் † வாய்பாடு யாப்பில் பின்வருமாறு:—

முதற்சீர் நான்கு மாத்திரை யளவுள்ள விளச்சீராகவும் இரண்டு, மூன்று, ஐந்து, ஏழு ஆகிய சீர்கள், மூன்று மாத்திரை யளவுள்ள தேமாச் சீர்களாகவும், நான்கு, ஆறு இடத்தன குறிலீற்றுப் புளிமாங்காய்ச் சீர்களாகவும், எட்டாஞ்சீர் நெடிலீற்றுப் புளிமாவாகவும் வரும்:—

கழைபடு காடு தென்றல் குயில்கூட வஞ்சு
கணையோன ணைந்து புகலும்
மழைவடி வண்ண னெண்ணி மகவோனை விட்ட
மலரான தொட்ட மதனன்
எழில்பொடி வெந்து வீழ விமையோர்க ணங்க
ளெரியென்றி றைஞ்சி யகலத்
தழல்படு நெற்றி யொற்றை நயனஞ்சி வந்த
தழல் வண்ண னெந்தை சரணே.

அப்பர் - பொது - தசபுராணம் - 9.

தேய்பொடி வெள்ளை பூசி யதன்மேலோர் திங்க
டிலகம்ப தித்த நுதலர்
காய்கதிர் வேலை நீல வொளிமாமி டற்ற(ர்)
கரிகாட(ர்) காலொ(ர்) கழலர்
வேயுட னாடு தோளி யவள்விம்ம வெய்ய
மழுவீசி வேழ வுரிபோர்த்
தேயிவ ராடு மாறு மிவள்காணு மாறு
மிதுதா னிவர்க்கொ ரியல்பே.

ஷை பொது - சிவனெனு மோசை - 3.

ஆக இத்தனை வகையனவே நாம் அளவைகளாக (Standard) கொள்ளக் கூடிய சந்த விருத்தங்களாம். இனி விருத்த யாப்புக்கு விதிவிலக்காயும், ஏகதேசமாயும், பழையனவாய்க் கழிந்தும், காணப்பட்ட சிலவற்றை ஆராயப் புகுவோம்.

* இவ்வகை விருத்தம் திருஞான சம்பந்தர் பதிகங்களில் பின்வருவன பெற்றுள:—திருநணிபள்ளி-பண்-பியந்தைக் காந்தாரம்; திருக்கொச்சைவயம், ஷை பண்; பொது ஷை பண்; கோளறு திருப்பதிகம், திருநாரையூர் ஷை பண், திருநறையூர்ச் சித்தீச்சரம் ஷை பண், திருத்தென் திருமுல்லைவாயில் ஷை பண்; ஆகிய இவை.

† விருத்தப்பாவியல் ஆசிரியர் இவ்விருத்தத்தின் முதல் சீர் கருவிளமாயிருத்தல் வேண்டுமென்றுகருதி மேல்விதி காட்டினர்போலும், ஆயினும் நான்கு மாத்திரைக் கூவிளமும் அங்கு அமையப்பெறின் அதுவும் இசையில் பொருந்தும். நமது சமய குரவர்களும் அவ்வாறு பாடி யிருப்பதையும் அவர் பதிகங்களிற் காணலாம்.

ஞான தீபம்

[469-வது பக்கத் தொடர்ச்சி]

உயரிய நன்மையானது புலன்களாற் பல வழிகளில் உணரப்படுகின்றது. எழிலில் அதைப்பார்க்கின்றோம்; சங்கீதத்தில் அதைக் கேட்கின்றோம்; நறுமணத்தில் அதனையே நுகர்கின்றோம்; ருசியில் அதை ருசிக்கின்றோம்; ஆரோக்கிய நிலையில், உடல் உரம்பெற்றுச் சிரத்தையுடன் பணிகள் பல ஏற்றுச் செய்துமுடித்து உற்சாகிக்கின்றோம். வெளிப்பரப்பு, அல்லது தோற்றத்திலேதான் அவைகளுக்குள் பேதகங் காணப்படுகின்றது. ஆனல், ஊன்றிப் பார்ப்பின், அவைகளின் இயைபு புலனுகும்.

காதல் என்பது ஓர் தெய்விகச் சக்தியாகும்; இச்சக்தியை இழிய பாசமாகத் தாழ்த்தி உழல்வது புல்லறிவாகும். மெய்க்காதல், அல்லது அநுராகம் என்பது புலனுகர்ச்சியினின்று உண்டாகி வளர்வதன்று. பரஸ்பர அறிவையும், இணக்கத்தையும், வாய்மையையும், சீர்சிறப்புக்களையும் உணர்த்துவதாகும். கற்பினுல் காக்கப்பட்டுச் செழித்து வளர்வதாம் காதல். காதலும் பாசமும் ஒரேசக்தியின் தோற்றமும் இயக்கமுமாயினும், ஏககாலத்தில் கூடிக்கலந்து விளங்குவனவல்ல. புலக்கட்டு அல்லது அறிவுவளர்ச்சியின் பலன் அநுராகம். புலச்சீரின்மையினின்றும் அறிவு மயக்கத்தினின்றும் சீறி எழுவது பாசம். துல்லிய அநுராகமானது கேவலப் பாசமாகத் தாழ்ந்து மாந்தரைக் கெடுக்கின்றது. அன்பு இன்புகளின் இயைந்த தோற்றமே காதல். உள்ளக் கனிவினின்று ததும்புவதாம்காதல். விசாலித்து ஆழ்ந்த சிந்தனைகளால் காதல் பொங்கிப்பெருகி நாலாபக்கங்களிலும் பரவுகின்றது. உயரிய நோக்கங்களுக்கும், தண்ணிய நினைவிற்கும் உதார குணத்திற்கும், வீரச்செயல்களுக்கும் தூண்டுகோலாவதாம் அநுராகம். வாழ்க்கைக்கு இயல்பான அல்லல்களின் கொடுமையைத் தணிப்பித்து ஆனந்த நிலையெய்துதற்குத் துல்லிய காதலைவிட வேருெருதுணையுமில்லை. சித்தத் தூய்மையையும் உள்ளத்தமைதியையும் குலைப்பதான பாசங்களின் ஆரவாரங்களை யடக்கி மன ஹிருதயங்களைத் தெளிவித்து உயர்த்தி நிலைநிறுத்துவது மெய் அநுராகமாகும்.

காதலின் எழுச்சியானது புஷ்பத்தின் மலர்ச்சியை நிகர்க்கும். மூடுபனியினுலும் வெப்பமிகுதியினுலும் அலரின் மலர்ச்சி குன்றிக் காம்பீரியம் மழுங்குதல் போல், பாசத்தினுல் கவரப்பட்ட காதல், அதாவது புலன்களின் நுகர்ச்சியே பிரதானமென்ற பாவனையினுல்பீடிக்கப்பட்ட காதல், இழிவடைகின்றது. பரஸ்பரவொற்றுமையும் அன்பும் இல்லாவிடின், இல்லம்இடுகாடாக மாறிவிடும். ஆனந்தம் அநுராகத்தின் சகோதரியாம், துக்கம் பாசத்தின் மகளாம்.

சந்ததிவிர்த்தியில் மாத்திரம் பெருமை யாதொன்றுமில்லை. எனினும், உடலமைப்பிலும், மனப்பயிற்சியிலும், குணவொழுக்கங்களிலும் நாளுக்குநாள் நனி சிறந்து வளர்ந்து விளங்கக்கூடிய சந்ததிப்பெருக்கமே நற்செல்வ மாகின்றது.

இல்வாழ்க்கையானது சுய சுகபோகங்களினிமித்தம் ஏற்படுத்தப்பட்டுநிலவுவதன்று. பாசப்பூர்த்தியே மணத்தின் கருத்தன்று.

காதலும் கற்பும் அன்பும் நிறையப்பெற்ற மணவாழ்க்கையினின்றுதான் நற்சந்ததிகள் உண்டாவன.

எவ்வகைச்சீர் சிறப்புக்களுடன்மாந்தர்கள் இருக்க வேண்டுமெனக் கருதுகின்றோமோ, அச் சீர்சிறப்புக்களைப்பெற்று விளங்குவதாக நம்புவதேதான் அவர்களை உயர்த்துதற்கான உபாயம் போலும். அவர்களுடைய புல்லிய குணத்தையும் நீச நடத்தைகளையுமே கவனித்துத் தூற்றிப் பழித்து வருவோமாயின், ஒரு பொழுதும் அவர்களை உயர்த்தற் கியலாது.

திரியை அக்னி எரித்துச் சாம்பராக்குதல் போல், இன்னலிடர்களை அகம் எரித்துத் துகளாக்க வேண்டும்.

உள்ளக் கருத்து நிறைவேறும் வரையிலும், அமைதியும் இன்பமும் உண்டாகா. ஒவ்வொருவனும் அவ்வவனுக்கான ஆதர்சத்தை ஆராய்ந்தறிந்து கடைப்பிடித்து ஒழுகும் வரையிலும் இடையூறுஇடுக்கண்களால் எதிர்க்கப்பட்டுத் துடிக்கவே வேண்டும்.

புண்கள் புரையோடித் தேகத்தை அழித்தல்போல் வெறுப்பும் பொருமையும் அதிருப்தியும் தீராச் சந்தேகமும் நாளுக்குநாள் பரவி, நம்முடைய மனத்தை அரித்து உள்ளத்தைப் பாழாக்குகின்றன. பின் விசனித்து அநுதபிக்கின்றோம். மேலும், அவைகளின் காரணத்தை அறிய முயற்சிசெய்கின்றோம். ஆயினும், நம்முடைய விபரீத குண நடத்தைகளேதான் காரணம் என்பதை உணராது, புறவிஷயங்களையும் சம்பவங்களையும் மீட்டுமீட்டும் துருவிப்பார்த்து வாணளை வீணாக்கி நெட்டுயிர்த்து மாய்கின்றோம்.

விருப்பங்கள் நம்முடைய சித்தப்போக்கின் அறிகுறிகளும், அகச் சக்தியின் தூதர்களு மாவன.

அமிதமான புத்திப்பெருக்கால் பயனில்லை, அதாவது விஷயாதிகளைச்சதாகாலமும் நுனித்து நுனித்துப் பார்த்தலால் ஞானம் சுரப்பதில்லை; முழு நம்பிக்கையுடன் நற்கருமங்களை மேற்கொண்டு சிரத்தையுடனும் நிராயாசத்துடனு முடித்தற் கியல்வதில்லை. ஒய்வு ஒழிவுகளில்லாமல், மனத்தேர்ச்சியு மின்றிப் பகுத்தறிவுமின்றிக் கருமங்களில் உலகம் ஈடுபட்டு உழல்வதால்விஷயாதிகளின் போக்கையும் திறனையும் முடிபையும்ஆய்ந்தோய்ந்து பார்த்தறியவும், நன்மைகளையே பற்றிச் செய்து பரப்பவும் முடிகிறதில்லை. எனினும் தீர்க்காலோசனையின்றி ஞானம் பெருகுவதுமில்லை; கர்மங்களையேற்றுப் புரிவதினுற்முன் ஞானம்வலிமைபெறுகின்றது; பக்தியும் சிரத்தையுமேதான் செய்கைகளுக்குத் தூண்டுகோலும், ஆதாரமும், துணையு மாவன.

உணர்ந்தறியக் கூடியவைகளைப் பக்தியுடன் நோக்குதல், அதாவது சிந்தித்தலேதான் சிந்தனையாளரின் பேரின்பமாகும்.

புத்தியின் படாடோபங்களை விடுத்து மேலெழுந்தவுடன் ஞானம் உதித்துப் பெருகும். ஞானத்திற்கு அநுகூலமாவதும் தடையாவதும் புத்தியாம்.

கிரியைகளில் உழல்வதை விடுத்தபின் அகச்சக்தி பெருகும். இச்சக்தியைப் பெருக்குவதும் குலைப்பதும் கிரியைகளாம்.

இச்சைகளையும் போக சிந்தனைகளையும் ஒழித்து எழுவோமாயின், பேரானந்தம் ததும்பும். இப்பேரா

னந்தத்திற்கு ஆதாரமாவதும் அதைக் குறைத்துச் சிதைக்கவல்லதும் இச்சைகளாம்.

சுயநலப் பற்றைத் துறந்து எழுவோமாயின், சத்புருஷர்களாவோம். இதற்கு மித்ருவாகவும் சத்ருவாகவும் நிற்பது அகப்பற்றே யாம்.

மாக்களின் குணத்தைக்கடந்தபின் மக்களாவோம். இதற்கு உபகாரமாவதும் அபகாரமாவதும் மாத்தன்மையே யாம்.

புத்தியைப் பூர்ணஞானமாக விருத்திசெய்வாயாக; ஆன்மஒளி நிரம்பப்பெற்றுவிளங்குவாயாக. இதுவே ஆதர்சம்.

முரட்டுப்பலத்தைச் சீரும் நன்மையும் பயக்கக் கூடிய ஆன்ம சக்தியாக மாற்றுவாயாக. இதுவே உன் ஆதர்சம்.

சுயநலப் போகங்களைச் சீரும் சிறப்புமுற்ற ஆனந்தமாக மாற்றுவாயாக. பேரானந்தத்தின் உருவாய்த் திகழ்வாயாக. இதுவே உன் ஆதர்சமாவது.

சஞ்சலத்திற்கும் பிணக்கத்திற்கும் விளைநிலமான தற்பொழிவைப் பிரபஞ்சத்தின் தோழனாகவும் தயாகுணமாகவும் திருத்துவாயாக. தெய்விகத்வம் நிரம்பப்பெற்று வாழ்வாயாக. இதுவே உன் ஆதர்சமாவது.

உழக்கியிழிக்கும் மிருகத்வத்தைக் கட்டியடக்கிப் பேதையர்களின் குருவாக விளங்குவாயாக. கிருஷ்ணனைப் போல் நிகழ்வாயாக. இதுவே உன் ஆதர்சம்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 2-ம் தசகம்

[798-வது பக்கத் தொடர்ச்சி]

குறிப்பு:-பாசுரத்தின் பதங்களாலே ஊஹித்தறியத்தக்க கமகங்களை இங்கு எழுதுவோம்.

I என்னுடைய தாழ்வை நினைத்துவந்த அவமதிப்பு அதாவது லக்ஷியக்குறைவு — வடிவழகும்மடப்பமுமுள்ள கோபிகள்பக்கல் வேட்கை கண்ணனுக்கு மிக அதிகம். அந்தக் காரணம்பற்றியே அவர்கள் பக்கல் அவனுக்கு மதிப்பும் பிரியமுமதிகம். அவர்கள் அழகு வாய்ந்தவர்கள், குணவதிகள்; அவர்களோடு கலவை நேரிட்டதால் நம்மை அவன் மறந்துபோக நிமித்தமாயிற்று. இவர்களைவிட்டுப் பிரிந்தால் அவன் தரிக்கவும் ஸஹிக்கவும் மாட்டான். ஆகையால் கண்ணன் வரவில்லை.

II நாயகியின் ஊடலுக்கு ஒரு நிமித்தமும் வேணுமோ? இங்குப் பிரணய கோபம் ஸபத்நியினிடத்தில் பொறாமையால் வந்ததன்று. கண்ணன் கலவை செய்து பிரிந்து வெகு நேரமாயிற்று. திரும்பிவர ஸமயமாகியும் அவன் வருகின்றான் இல்லை. தூதும் விட்டோம். அதற்கும் அசையவில்லை; இசையவில்லை; அன்பின் குறைவே நிமித்தம்.

III இனி, அவன் வந்தாலும் நாம் அவனைக் கடாக்ஷிக்கக் கடவோ மல்லோம். நாம் கலவை செய்தாலும் நம்மைப் பிரிய அவனுக்கு நேருகின்றது. இவ்வண்ணம் நேரும் பிரிவை ஆற்றல் நம் தரமல்ல. நெடுங்காலம் விட்டுப் பிரிந்து நோவுபடுதலினும் அடிதொட்டுக் கலவாதிருப்பதே ஒருவாறு நலம்; ஆகையால் கண்ணன் வந்தாலும் நாம் உரையாடோம். சிநேகம் பாராட்டுவோம் அல்லோம், என்ற மன நிச்சயத்தோடு ஆயர்பாடியில் ஓரிடத்தில், பின் பாசுரங்களில் கூறியிருக்கின்றபடி, தோழிமாரோடும் பண்குழறு பூவையோடும் கிளிகளோடும் பந்து கிட்டி சிற்றிலிட்ட தட்டுமுட்டுக்களோடும் சிறுசோறு அடவும் இடவும் வேண்டிய கருவிகளோடும், பிராட்டி ஒதுங்கி இருந்தாள். கண்ணன் கடாக்ஷமல்லது ஆத்மதாரணத்துக்குப் பற்றுக்கோடில்லாத இவள் ஸதாஸர்வகாலமும் அவனது கலவையையே மனமாரச் சிந்தித்திருக்க உதாஸீந பிரகடந வேஷம் போடுவதால் சமயமிட்டுச் சங்கேதத்தால் காத்திருக்கின்றாளென்று ஆறாயிரப்படி கூறுகின்றது.

IV. பகவானைப்பக்தர்கள் நிந்தித்துப் பேசலாமோ வென்ன?—நாயகிக்குத் தன் நாயகனை முனிந்து கடிந்து பேசுவதுபோல் நெடுநாள் சிநேகத்தால் வலிகடவாத மாற்றம் இடித்து உரைத்தாலும் அவன் தன் பிரீதியாலே ஸஹிப்பானென்பது எண்ணம்.

V. மின்னிடை மடவார்...சூடுவார்:-நாயகியாகிய கோபி, கண்ணன் தன்னைத் தனக்கு உரித்தான நன்மதிப்போடு ஸ்வீகரிக்கவில்லை என்றும் பிற இஷ்ட கோபிகளை அதிகமாய்மெச்சி மதித்துக் கிருபை செய்கின்றான் என்றும் கொண்ட இந்நோக்கம் ஒருபக்கம் ஏற்றமும் மற்றொருபக்கம் தாழ்வும் தெரிவித்து நிற்கின்றது. அவன் இப்பக்ஷபாத மடியாக நம் பிரிவையாற்றி இருப்பான், மற்றவர்கள் பிரிவை ஆற்றான். தானே அவர்களிடம் தேடிச் செல்வான்-அவர்களை விட்டுத் தனித்துத் தரித்திரானென்பது இப்பிராட்டியின் தத்கால மனோபாவம்.

VI. பிணக்குஒருவாறு இப்படிக் கோபி மனதைச் சஞ்சலஞ் செய்தாலும் அவளுக்கு உள்ளத்தின் நிலையில், கிருஷ்ணன் வர ஸமயமாய் விட்டபடியால் நாம் கோபித்திருப்போமென்று இருப்பாளென்று அவன் ஊஹிக்கக் கூடும். அவனின் கொடுமையால்தத்காலம் அவனது கலவை வேண்டவே வேண்டாவென்றிருக்கிறோம். இதுதான் தாக்க சமயம் இவளைத் தத்காலம் விபரீதம் விளைத்து வேடிக்கைபார்ப்போம் என்று கள்ளசிந்தையால் அவன் வருவானென்பது ஒருதலை. சகுனமும் கிருஷ்ணன் வரவை முன் கூட்டி அறிவிக்கின்றது. இதுதான் ஸமயம்; நாம் அவனோடுகலத்தல் செய்வோ மல்லோம். இதனால் அவன் நலிவுபடுவான் அன்றோ. நம்மைவிட்டு அகன்று நெடுங்காலம் அவன் நமக்கு நலிவு செய்ததற்கு எதிர்த்தட்டாக நாம் இது செய்வது தக்கதே.

VII a-நான் அது அஞ்சுவன்-அது-அதாவது நீ, என்பந்தும் கழலும் கொண்டு விளையாடி உற்சாகம் கொள்வதை உன் மின்னிடையார் கண்டாராகில்உன்னை நிந்திப்பார்கள், அலட்சியம் செய்வார்கள், அடிப்பார்கள் என்று இப்பிராட்டி கோபாவேசத்தால் சொல்லவேண்டியிருக்க, “உன் அருள் சூடுவார்” என்று சொன்னது பரிஹாஸவார்த்தை.

(b) அது என்பது இங்கே “இது” என்ற அர்த்தத்திலும் சந்தர்ப்பத்திலும் வந்திருக்கின்றது. தூரத்திலிருக்கின்ற ஸம்பவத்தைத் குறிக்கும் “அது” என்பதை உபயோகித்தது இப்பிராட்டி கிருஷ்ணன் முகத்தைப் பாராதே பராமுகமாய்ப் பேசினதைக் குறிக்கின்றது.

(c) “அருள் சூடுவார்” என்று தலைகீழாய்ச் சொன்னதற்குக் காரணம்-இப்படித் தங்கள் மனதின் அந்தரங்கத்தைச் சொன்னால் கிருஷ்ணனுக்குப் பேச்சுக்கிடமுண்டாகும், அவன் நம்மைக் களிப்பித்துவிடுவான். நாம் இந்தச் சமயம் அவனைப் பொடிந்து இடித்துக் கூறவாய்த்ததை வீணாக விட்டுவிடலாகாது. நம் உறுதி நிச்சயம் நெகிழ்ச்சிபெறும். நாம் எவ்வளவு அவன் விரஹத்தால் படுகின்றோமென்ற உணர்ச்சி கிருஷ்ணனுக்கு இல்லை. அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க இதுதான் சமயம்.

(d) முன்பு - இதர கோபிமார்கள் முன்னிலையில் - பந்து விளையாட்டு இப்பிராட்டியின் முன் நிகழாநிற்க மற்றவர்கள் முன்னிலையில் என்று எப்படிச் சொல்லலாம் என்றால்-இதற்குத் தாத்பரியம், கண்ணன் இவ்விளையாட்டு ஆடினதை மற்ற கோபிகள் கண்டுபிடிப்பார்கள், நாம் அவர்கள்முன் களிப்பாய் ஆடிக்கொண்டிருந்ததை ஊஹத்தால் கண்டுபிடிக்க வில்லையோ?

(e) நான் - கிருபாவசியைப் போற்றும் நான் உன்னைப்போலே தயவில்லாத வன்மைநெஞ்ச முள்ளவளல்லள்.

(f) எங்கள் தயவு இருப்பதால் காரியம் என்னவென்றால், நீ இங்கே சிறிது நேரம் ஆடிக் காலம்விளம்பித்துப்போனால் அவர்கள் முகங்கொடார்கள், நீ அது பொறுக்காமல்துடித்துப்போவாய், அந்தத்துடிப்பை எங்கள் மனம் ஸஹிக்காது.

(g) “அஞ்சுவன்” என்கின்றபதத்திலும் உள் அந்தர்கதம் இதுவே.

(h) எனக்கு நீ உறவில்லையாகின் எனக்காக வருத்தப்படக் கூடுமோவென்று கிருஷ்ணன் கேட்க-அது உறவினால் அன்று கேவலம் எங்கள் கருணையின் சுரப்பாலென்று இப்பிராட்டி விடை கொடுக்கிறாள் “என்” என்கிற பதத்தால் பிராட்டி உறவறுத்துப் பேசுவதாகக் கிருஷ்ணன் ஊகித்தான்.

(i) மற்றப் பிராட்டிமார்கள் பார்க்காதிருக்கவும் கிருஷ்ணன்என் இந்தக் கோபிமேல் பக்ஷபாதம் ஆரோபித்து, உண்மையின்றி ஏற்றும் வசை வார்த்தைக்கு இடம் கொடுத்தார் என்றால், அவளது ஹாஸியப் பேச்சின் ரஸம் அவனுக்கு நல்அமிர்தம்போல் இருந்தது. மேலும் மேலும் இவள் உரையாடுவதைக் கேட்க ஆசை யுண்டு.

(j) “மன்னுடைய இலங்கை காய்ந்த மாயவனே”- நம்மாழ்வார் தம் பாசுரங்களி லெடுக்கும் உல்லேகம் பாசுரங்களின் சமய சந்தர்ப்பங்களுக்கு அத்தியந்தம் பொருத்தமுள்ளவைகளாகவே வாய்க்கும் என்று உபோத்காதத்திலேயே நாம் வரைந்துள்ளோம். வீணான ஒருசொல்கூட இக்கவியின் கிரந்தங்களில் கிடையாது. வால்மீகிபகவான் போல் பதங்களை அளந்தெடுத்து உபயோகிப்பதே இக்கவிக்கு வழக்கம். ஆழ்ந்த பயனுள்ளதை ஊன்றி ஆராய்ந்து தெளியவேண்டும்.

உதாரணமாக-இலங்கையை ஸ்ரீராமபிரான் அழித்ததைச் சொல்ல நிமித்த மென்ன ? ஏதோ கிருஷ்ண பகவானுக்கும் இக்கோபிக்கும் பேச்சு வளர்ந்திருக்க வேணும். அந்தச் சம்வாதத்தை ஊஹித்துப் பூர்வத்தில் அபார மனோசக்தியுள்ள உரைகாரர் ஆகிய திருக்குருகைப்பிரான்பிள்ளான் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்:—அதாவது, கிருஷ்ணன் கோபியை நோக்கி “வேறொரு கோபி நிமித்தம் நான் வந்ததாக நீ சங்கைப்படுவானேன், வேறொருத்தி எனக்கு உண்டோ? இருந்தாலல்லவோ அவள் நிமித்தம் நான் வருகை ஸம்பாவிதம்? உன் பக்கலுள்ள அதிகப் பிரீதியாலேயே உன்னைப் பிரிந்து தரிக்கமாட்டாமல் வந்தேன். அத்தனையே உளது” என்கிறான், அதற்குக்கோபி “என்பக்கம் உனக்கு ஸ்நேகம் உண்டென்று நீ பணிப்பது பொய்”. கிருஷ்ணன் “நான் யாரோடாவது கலந்து பரிமாறினால் அவர்கள் பக்கம் பொய்யான ஸ்நேகம் செய்யுமவனோ?” கோபி- ‘உனக்கு யாரோடாவது ஒருத்தியிடத்தில் உண்மையான சிநேக மிருந்திருந்ததாயின் அவள் யாரென்று சொல்லிக்காண்.” கிருஷ்ணன் - “சீதாபிராட்டியினிடத்தில் மெய்யான அன்பு உண்டாயிருக்க வில்லையோ?”. கோபி-“ அப்பிராட்டியிடத்திலும் நீ பாராட்டிய ஸ்நேஹம் பொய்யே!” கிருஷ்ணன்-“பொய்யானால் இலங்கையை அழிக்கக் கூடுமோ” கோபி,—“நீ மாயவன், பொய்யை மெய்போல் பிரகடனம் பண்ணிக் காட்ட வல்ல னல்லனோ?

(k) உன் சுண்டாயம் யான் அறிவன்—இலங்கையை அழித்தது, உனக்குச் சீதாபிராட்டியிடத்தில் நிஜ அன்பு இருந்ததாகத் தோற்றச் செய்த உபாயம்—அது என்போலிகளை அகப்படுத்தச் செய்த வஞ்சனையென்பது எனக்குத் தெரியும்.

(l) அதுகொண்டு செய்வதென்—நான் சீதாபிராட்டியைப்போல் நீ செய்கின்றவை எல்லாம் நிஜமென்று நம்புகிறவளல்லள். உன் கபடநாடக ஸூத்திரங்களை அறியத்தக்கவள்; இனி இப்படி எனக்கு அறிவு தெளிந்திருக்க நீ ஒன்றும் வல்லனல்லன் ! அவைகளால் என்னை உன் வசப்படுத்த இயலாது.

(m) நம்பீ-ஸ்திரமான சிநேகிதமில்லாத கேவலம் முகப் பரிச்சியமுள்ளவர்களை விளிப்பதுபோன்ற சம்போதநம் - முகப்பரிச்சியங்கூட இல்லாமல் பூஜ்ஜியராகத் தோற்றுகிற பெரியோரை இவ்வண்ணம் தென்னாட்டில் விளிப்பது வழக்கம். இவ்வண்ணம் விளித்தது - “நீர் யார், உம்மோடு பழகி யிருப்போமோ” என்று கேட்பதுபோல், நெடுங்காலம் விலகித் தனியே விட்டுபோனதின் நிமித்தம் இக்கொடூர வார்த்தை வந்தது.

(n) என் பந்தும்-இவளிடமிருக்கும் பந்தை இவளதுதான் என்று உரைக்க அவசியம் என்னவென்றால்-கிருஷ்ணன் தன்னிடத்தில் வேட்கை மிகுதியுள்ளவனாயிருந்தால் நம்மைப் பிரிந்து இவ்வளவுகாலம் தாமஸஞ்செய்து வரமாட்டானாகையால் வேறே சில அவன் நன்கு மதிக்கும் பிராட்டிமாரிடத்திலிருந்து பிரிந்து அவரைக் கொஞ்சகாலம் பிரிந்த வியஸநத்தாலே சஞ்சலப்பட்ட புத்தியால் நம்மை அவராகப் பிரமித்து நம் பந்தை எடுத்திருக்கிறானென்ற எண்ணத்தால் வந்த வாக்குப் பிரயோகம் இது; ஆதலினால் - மற்றையவள் பந்தல்ல என்று வற்புறுத்தல் ஸங்கதம்.

“என் பந்து”-பிரிய ஸஹியாகிய இவள் அது தன் பந்தானாலும் அவன் பந்தாக நினைக்கவேண்டாவோ? வித்தியாஸப்பேச்சுச் சொல்ல நியாயம் என்ன? பின் ஏன் இவ்வண்ணம் கூறினாள் என்றால்-அவனுக்கும் தனக்கும் உறவு யாதொன்றுமில்லை என்று அவனுக்கு உணர்த்துவதின் நிமித்தம்; கண்ணன் இவள் பந்து தான் என்று எடுத்திருக்க அவனுக்கு உணர்த்த அவசியமும் இது தான்.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 5. களம் 1.

[784-ம் பக்கத் தொடர்ச்சி]

[தாம் திருடிய துணிகளை அணிந்திருந்த காலிபனையும், ஸ்ட்டிபானோவையும், ட்ரின்குலோவையும் துரத்திக் கொண்டு ஏரியல் மீண்டும் வருகின்றது]

ஸ்ட்டிபானோ:—அவனவன் மற்றவர் எல்லாரையும் சமாளிக்கட்டும்; ஒருவனும் தன்னைப் பற்றிக் கவலைப்படவேண்டா; ஏனெனில் எல்லாம் அதிர்ஷ்டவசம் (1)—பயப்படாதே, தோழா விருபியே, பயப்படாதே (2)

ட்ரின்குலோ:—என் தலையில் தரித்திருக்கும் இவை உண்மையாய ஒற்றர்களேயாயின், நல்லதோர் காட்சி இங்குளது (3).

காலிபன்:—ஓ ஸெட்டிபாஸ், அழகிய ஆவிகள் இவை உண்மையே (4)! என் எசமானன் எத்தனை அழகாக இருக்கின்றான் (5)! என்னை அடித்து வருத்துவானென அஞ்சுகின்றேன்.

ஸபஸ்ட்டியன்:—ஹ ஹா! என்னவோ இவை, அன்டோனியோ பிரபுவே? காசுதான் வாங்குமோ இவைகளை (6)?

அன்டோனியோ:—இயலலாம்; அவைகளில் ஒன்று வெறும் மீன்; விலையாகக்கூடியதென்பதில் ஐயமில்லை (7).

ப்ராஸ்ப்பீரோ:—பிரபுக்காள், இவர்களது அடையாளங்களைப் பார்த்து, அப்புறம், அவர் உண்மையோவென்று சொல்லுங்கள் (8)—இந்த விரூபிக் கயவன்—இவன் தாய் ஒரு சூனியகாரி; சந்திரனை அடக்கி யாண்டு, அதன் சக்தியின்றி, பெருகவும் சுருங்கவும்செய்து அதன் கட்டளையைச் செலுத்த வல்ல அவ்வளவு ஆற்றலுடையவள் (9). இம்மூவரும் என்னைக் கொள்ளையடித்தனர்; இந்தப்பாதிப் பேய்—ஏனெனில் இவன் ஓர் சோரமகன் (10)—என்னுடைய உயிரையும் வாங்கிவிட அவர்களுடன் சூழ்ச்சிசெய்தான்: இப்பயல்களில் இருவரை நீ தெரிந்து உரிமைகொள்ளவேண்டும்; இந்த இருட்டின் பொருளை (11) நான் என்னுடையதென்று ஒப்புக்கொள்கின்றேன்.

காலிபன்:— கிள்ளிக் கிள்ளிக் கொல்லப்படுவேன் நான்.

அலான்ஸோ:—என் குடிகார பட்லர் ஸ்ட்டிபானோ அல்லவா இது?

ஸபஸ்ட்டியன்:— இப்பொழுதுங் குடித்திருக்கின்றான். எங்கே கிடைத்தது இவனுக்குச் சாராயம்?

அலான்ஸோ:—ட்ரின்குலோவும் சுழலச்சுழலப் பழுத்திருக்கின்றான் (12); இப்படி இவர்களை மெருகிட்ட திவ்விய திராவகத்தை இவர் எவ்விடத்தில் கண்டு பெற்றிருக்கக்கூடும் (13)? இந்த ஊறுகாய்க்கு எப்படி வந்து சேர்ந்தாய் நீ (14)

ட்ரின்குலோ:—நின்னைக் கடைமுறை கண்டதிலிருந்து நான் ஊறிக்கிடந்தது என் எலும்பைவிட்டு ஒருபோதும் நீங்காது. இனி என்னை ஈ மொய்க்குமோ என்ற பயமில்லை (15)

காலிபனின் தூண்டலால் ப்ராஸ்ப்பீரோவைக்கொன்று அத்தீவின் அரசினையும் மிராண்டாவையுங் கைப்பற்ற வந்த அந்தக் குடிகார 'பட்லர்' ஸ்ட்டிபானோ, குகையின் வாயிலில் ஏரியல் கொணர்ந்து வைத்திருந்த சில பகட்டு ஆடைகளின்பொருட்டு ட்ரின்குலோவுடன் பூசலிட்டு முடிந்த பிறகு அவ்வாடைகளைச்சேமம்செய்யுந்தருணத்தில் ப்ராஸ்ப்பீரோவின் ஆவிகள் அவர்களைத் துரத்தியடித்து அல்லல்படுத்திய செய்தி, 4-வது அங்கத்தின் இறுதியில் கூறப்பட்டிருக்கின்றது.

(1) ஏரியலால் துரத்தப்பட்டு, உயிர் உண்டோ இல்லையோ என்று இரைக்க இரைக்க ஓடிவருகின்ற ஸ்ட்டிபானோ, மதிகலங்கி யிருப்பதால், "எல்லாம் அவரவர் அதிர்ஷ்டவசம்; ஆகையால் இந்நவேளை ஒருவர்மற்றவரைக் காக்க வேண்டுமென்று கவலைப்படவேண்டா, அவனவன் தன்னைச் சமாளித்துக்கொள்ளும் வழியைத் தேடிக்கொள்ளட்டும்" என்று சொல்வதற்கு நினைத்தவன், அதற்கு மாறாக மொழி குழறி, அவனவன் மற்றவர்களைச் சமாளிக்கட்டுமென்றும் ஒருவனும் தன்னைப் பற்றிக் கவலைப்படவேண்டா வென்றும் பிதற்றுகின்றான்.

(2) பயங்கொண்டிருப்பவர் மற்றவர்க்கு அபயம் கொடுப்பது இயற்கை.

(3) தலையில் தரித்திருக்கின்ற ஒற்றர்கள் என்று இவன் தன் கண்களைக் குறித்துக் கூறுகின்றான். ஒற்றர்களைப்போல் கண்களும் வெளியில்நிகழ்பவைகளைத் தெரிவிப்பதால் இவ்வாறு கூறுவது பொருந்தும். நான் காண்பது மாயத்தோற்றமல்லாமல்மெய்யேயாயின்நல்லவோர்காட்சி காண்கின்றேன்" என்று அலான்ஸோ முதலியவர்களைக் கண்ட வியப்பினால் சொல்கின்றான்.

(4) அலான்ஸோ முதலியவர்களை ஆவிகளே என்று கருதி இப்படிச் சொல்கின்றான். ஸெட்டிபாஸ் ஓர் துஷ்ட தெய்வத்தின் பெயர். (311 வது பக்கம் பார்க்கவும்) அக்கடவுளின் பேரால் ஆணைவைத்துத் தன் வியப்பைத் தெரிவிக்கின்றான்.

(5) ப்ராஸ்ப்பீரோ இப்பொழுது அரசஉடை தரித்திருப்பது கண்டு இப்படி வியக்கின்றான்.

(6) காலிபன் முதலியவர்களைப்பார்த்துக்கூறியதுஇது, பணம்கொடுத்தாலும் இப்படிப்பட்டவைகளை வாங்கமுடியுமோ—என்பது பொருள்.

(7) ட்ரின்குலோவைப் போன்றே, அன்டோனியோவும் காலிபனை மீன் என்று பழிக்கின்றான். இது மீனாகையால் விலைக்கு வாங்கக்கூடியதே—என்பது பொருள்.

(8) ஸ்பஸ்ட்டியனும் ட்ரின்குலோவும் அலான்ஸோவின் ஆட்களே ஆயினும், அலான்ஸோவேனும் ஸபஸ்ட்டியன் முதலியவர்களேனும் அவர்களைத் தெரிந்துகொள்ளவில்லை. ஆகையால், "உங்கள் வேலைக்காரர் என்பதற்குரிய அடையாளங்கள் இவர்களிடத்தில்இருக்கின்றனவா என்று பார்த்து, உண்மையில் இவர் உங்கள் வேலைக்காரர்கள்தானா என்பதைச் சொல்லுங்கள்" எனக் கூறிவிட்டுப் பிறகு காலிபனைப் பற்றிச் சொல்லப்போகின்றான்.

(9) முதனூலைப்போன்றே மொழிபெயர்ப்பிலும் இவ்வாக்கியத்தின் பொருள் தெளியமாட்டாமல் இருக்கின்றது. வெள்ளம் பெருகுவதற்கும் சுருங்குவதற்கும் காரணமா யிருக்கும் சந்திரனது சக்தியையும் அடக்கித் தானே அக்காரியத்தைச் செய்யும் சக்தியுடையவள்—என்று கொள்ளலாம்.

(10) ஸைக்கொராக்ஸிற்கும் பேய்க்கும் பிறந்தவன் காலிபன் என்று ப்ராஸ்ப்பீரோ காலிபனைப் பழிப்பதற்கு

ஸபஸ்ட்டியன்:—ஏன், என்ன செய்தி, ஸ்ட்டிபானோ!

ஸ்ட்டிபானோ:—ஓ, என்னைத் தொடாதே, நான் ஸ்ட்டிபானோ அல்லன்;—ஒரே குரக்குவலி. (16)

ப்ராஸ்பீரோ:—ஏடா, இந்தத் தீவிற்கு அரசனா யிருந்திருப்பாய் நீ?

ஸ்ட்டிபானோ:—எனின், மிகவும் வலியனா யிருந்திருப்பேன் நான் (17).

அலான்ஸோ:—(காலிபனைக் குறித்துக் காட்டி) நான் பார்த்திருக்கின்ற ஆச்சரியங்களில் இதுவொன்று.

ப்ராஸ்ப்பீரோ:—இவன் உருவமேபோல் குணத்திலும் விகாரமானவன்—அடே, என் குகைக்குள் போ, உன் தோழர்களையும் அழைத்துச் செல். என்னுடைய மன்னிப்பை எதிர்பார்க்கின்றா யாகையால், அழகுற அதனை அலங்கரித்து வை (18).

காலிபன்:-ஆகா, செய்வேன்; இனி நான் அறிவுபெற்று உன் அருளை வேண்டுவேன். இந்தக் குடிகாரனைக் கடவுளாகக் கொள்ளவும், அந்த முழுமூட மந்தியை வணங்கவும், என்ன, யானொரு மூவிரண்டு முறைக் கழுதையா யிருந்தேன்! (19).

ப்ராஸ்ப்பீரோ:—சீ போ; போய்விடு.

அலான்ஸோ:—போங்கள், நீங்கள் கண்டெடுத்த இடத்தில் இந்தச் சுமையைச் சேருங்கள் (20).

ஸபஸ்ட்டியன்:—திருடிய இடத்தில் என்னல் வேண்டும்.

[காலிபனும், ஸ்ட்டிபானோவும், ட்ரின்குலோவும், போகின்றனர்.]

ப்ராஸப்பீரோ:—ஐயனே, நின்னையும் உன் பரிவாரத்தினரையும் என் குகைக்கு வருமாறு அழைக்கின்றேன்; இவ்வொரு இரவு நீர் இங்கு அமர்ந்திருக்கலாம்; என் வாழ்க்கையின் கதையையும், நான் இத்தீவிற்கு வந்தபின் நேர்ந்த சிலவற்றையும் சொல்லி, அவ்வகைப் பேச்சினால் இவ்விரவின் ஒரு பகுதியேனும் விரைவில் கழியும்படி செலவுசெய்வேன். (21). காலையில் உங்களை உங்கள் கப்பலுக்கும் அங்கிருந்து நேப்ல்ஸிற்கும் கொண்டு சேர்ப்பேன்; அங்கு இந்த நம் அருமைக் காதலர்தம் வதுவை முறைப்படி முற்றுவதைக் காணுமொரு நம்பிக்கையுள்ளேன்; அதன்பின் மிலானுக்கு அகன்று, அங்கு என் நினைவுகளில் மூன்றிற்கொன்று என் கல்லறையா யிருக்கும் (22.)

அலான்ஸோ:—காதினை அதிசயமுறக் கதுவவேண்டிய உன் கதையினைக் கேட்க நான் அவாவுகின்றேன்.

ப்ராஸ்ப்பீரோ:—அனைத்தையும் வழங்குவேன் நான். அமைதிக் கடலும், சுபமான காற்றும், வேகமுடைய பாய்களும் பெற்று, அரசே, மிக்கதூரம் போயிருக்கின்ற உன் கப்பற்படையை நீ எட்டுவா யென்று வாக்களிக்கின்றேன் (23)—[ஏரியலுக்கு ஒரு புறமாய்] என் ஏரியல், கண்ணே, இது உன் காரியம். அதன்பின், காற்றோடு கலந்து, விடுதலை யடைவாய், நல்விடை கொள்க (24)—தயை செய்து அருகு வம்மின். (25)

[போகின்றனர்]

இணங்க, அவனைச் சோரமகன் என்றும், அவன் தாய் மனித இனத்தைச்சேர்ந்தவளாயிருக்க, தகப்பன்மாத்திரம் பேயாயிருப்பதால், 'பாதிப்பேய்' என்றும் குறிக்கின்றான்.

(11) இருட்டின் பொருள், என்பது, ஆங்கில வழக்கில் 'பேய்' என்று பொருள்படும்.

(12) சுழலச் சுழலப் பழுத்திருத்தல் என்பது, தலை சுழலும்படி கள்வெறியில்முதிர்ந்திருப்பது—என்று பொருள்படும்.

(13) மெருகு கொள்ளல் என்பது ஆங்கில வழக்கில் குடிவெறிநிலையைக் குறிக்கும்.

(14) சேறும் அழுக்கும் பூசிக்கிடக்கின்ற ட்ரின்குலோ ஊறுகா யிட்டதுபோல் தோன்ற, "இந்நிலைக்கு எவ்வாறு வந்தாய் நீ" என்று அரசன் வினவுகின்றான்.

(15) ஊறுகாயை ஈ மொய்க்காதாகையால் தனக்கு இனி அந்தப் பயம் இல்லை என்கின்றான்.

(16) என்ன செய்தி என்று கேட்டுக்கொண்டே ஸபஸ்ட்டியன், ஸ்ட்டிபானோவைத் தொடச் செல்ல, "நான் குரக்குவலியின் உருவமேயன்றி ஸ்ட்டிபானோவோ அல்லன்; என்னைத் தொடாதே; தொட்டால் என் வலி பின்னும் அதிகமாகிப் பொறுக்கமாட்டேன்—என்பது பொருள்.

(17) எனடா, நீ யல்லவோ இந்தத் தீவிற்கு அரசனாக ஆசைப்பட்டாய், என்று ப்ராஸ்ப்பீரோ பரிகசிக்கவும், "நான் அரசனானேன்ஆயின் மிகவும் வலியனாய் இருந்திருப்பேன், என்று ஸ்ட்டிபானோ பதில் கூறுகின்றேன். வலியன் என்பது இங்கு இரு பொருள்படக் கூறப்பட்டிருக்கின்றது. ஒன்று, வலியை உடையவன் = நோவுபடுகின்றவன், = கொருக்க வலியுடைய அரசன். மற்றது, வலிமையுடையவன் = வல்லரசன்.

(18) அதனை = குகையை.

(19) மூவிரண்டுமுறை கழுதை = நான் ஒரு கழுதை என்று உரைப்பது போதாது, ஆறு மடங்குக் கழுதையே நான் என்று கூறுகின்றான். தாம் விடுதலை யடையும் பொருட்டுத் தலைவர்களைத் தேடிக்கொண்டவர் பலர் இந்தக் காலிபனைப் போலவே முடிகின்றார். காலிபன் அதனைக் கடைசியிலேனும் உணர்ந்தான்; மனிதரில் பலர் இறுதியிலும் உணர்வதில்லை.

(20) என்று ஸ்ட்டிபானோவிற்கும் ட்ரின்குலோவிற்கும், அவர் சுமந்திருந்த துணிமூட்டையைக் குறித்துச் சொல்கின்றான்.

(21) இரவில், என் கதையைச் சொல்லி இவ்விரவு விரைவில் கழியும்படி செய்வேன்—என்பது பொருள்.

(22) மிலானிற்குச் சென்று நான் அமர்ந்தபின், என் சாவை நினைத்து, அதற்குரியவைகளைச் சிந்தித்துக் கொண்டிருப்பேன்—என்பது பொருள்.

(23) வேகமுடைய பாய்கள்—உன் கப்பலை வேகமாகச் செலுத்தக்கூடிய (கப்பலோட்டும்) பாய்கள். உன்னோடு வந்த மற்றையகப்பல்கள் பிரிந்து மிக்கதூரம் போயிருக்கின்றன. அவைகளையும் நீ போய்ப்பிடித்துவிடலாம்-என்பது பொருள்.

(24) இந்தக் கப்பலைக் காத்துச் செலுத்தி மற்றக் கப்பல்களுடன் சேர்ப்பதோடு உன்வேலை முடிகின்றது. அதன்பின் நீ வேண்டிய விடுதலையை அடைவாய்—என்று விடைகொடுக்கின்றான்.

(25) என்று அலான்ஸோ முதலியவர்களை அழைத்துக்கொண்டு குகையினுள் செல்கின்றான்.

"காற்று மழை" முற்றிற்று.

தமிழ்ப்பாடம் 95.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி

[802-வது பக்கத் தொடர்ச்சி]

மலருந்தி மேல்விழ மெய்நெறித் தான்வைய
மேழுந்துஞ்சா
மலருந்தி னரங் கன்குற ளாய்மண்
ணளந்தவந்நாண்
மலருந்தி வாக்கதிர் வண்குடை யாய்முடி
மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி
மணியொத்ததே 12

பதப்பிரிவு:—மலர் உந்தி மேல் விழ மெய் நெரித்தான் வையம் ஏழும் துஞ்சாமல் அருந்தினன் அரங்கன் குறள் ஆய் மண் அளந்த அ நாள் மலரும் திவா கதிர் வள் குடை ஆய் முடி மா மணி ஆய் மலர் உந்தி ஆய் திரு தாள் விரல் ஆழி மணி ஒத்தது ஏ.

பதவுரை.

மலர்-மல்யுத்தம் செய்யும் வீரர்கள், உந்தி-தள்ளி, மேல்-தன்மேல், விழ - வந்து விழுந்தபோது, மெய்-அவர்களது உடலை, நெரித்தான்-நொருக்கிக் கொன்றவனும்; வையம்-உலகம், ஏழும்-ஏழையும், துஞ்சாமல்-(பிரளயகாலத்தில் அவை) அழியாதபடி, அருந்தினன்-உண்டவனும்ஆகிய, அரங்கன்-திருவரங்கன்; குறள் ஆய்-மாவலியினிடம் வாமனனாக வந்து, மண்-உலகத்தை, அளந்த-அளந்துகொண்ட, அ நாள்-அன்றையதினம், மலரும் - விரிந்து விளங்குகின்ற, திவாக் கதிர்-சூரியனனது,(அவருக்கு) வள்-வளப்பமுடைய, குடை ஆய் - குடை ஆகியும்; (பிறகு) முடி-கிரீடத்தினுள்ள, மா-சிறந்த, மணி ஆய் - இரத்தினம் ஆகியும், (பிறகு), மலர்-தாமரைபோன்ற, உந்தி ஆய்-நாபி ஆகியும்,(கடையில்அவரது) திரு-அழகிய, தாள்-பாதத்தினுள்ள, விரல்-விரலில் அணிந்த, ஆழி-மோதிரத்தில் பதித்த, மணி-இரத்தினத்தை, ஒத்தது-போன்றது.

கருத்து:—வாமனனாகி வந்த திருமால் பின் திருவிக்கிரமனாக வளர்ந்தவிதத்தைக் கவி இங்குச் சூரியனைக் கொண்டு அளந்து காட்டுகின்றார். இவருடைய உருவம் சூரியமண்டலத்தைஎட்டி நெருங்கியபோது, அச்சூரியன் இவருக்குக் குடைபோல் தோன்றியது. பின்னும் வளர்ந்த இத் திருவிக்கிரம உருவம் சூரியமண்டலத்தைத் தொட்டபோது, அவரது கிரீடத்தின் சிகாமணிபோல் சூரியன் அமைந்தது. வளர்ச்சி அதனோடு நிற்கவில்லை. மேன்மேலும் சூரியனைக் கடந்தும் உயர்ந்துபோகையில், அந்தச் சூரியன் இவரது நாபி இருக்கும் அளவில் நிற்கலாயிற்று. இன்னமும் வளர்கின்றார் எம்பெருமான். அப்படி வளர்ந்த உருவத்திற் கேற்ற பருமன் பாதத்திற்கு மிருக்குமாகையால், அப்பாதமே பூமிமுதல் சூரியன்வரையில் நிரம்பியிருக்க,அவரது கால்விரல்மோதிரத்தின் மணிபோல் சூரியன் தென்பட்டது. இதனால் திருவிக்கிரமாவதாரத்தின் உயரமும் பருமனுந்தெரியவரலாகும்.

விளக்கம்:—'மலருந்தி' என்னும் யமக வெழுத்துக்கள், மலர் உந்தி, என இரண்டு சொற்களாய் முதலடியில் பிரியும். மல்லர் என்பது மலர் என்று விகாரப்பட்டது முதற்சொல். உந்தி என்பது தள்ளி என்னும் பொருளுடைய வினையெச்சம்.

கிருஷ்ணாவதாரத்தில், கம்சனும் துரியோதனனும் தன்னைக் கொல்வதற்கு ஏவிய மல்லர்களைத் திருமால் கொன்றது முதலடியில் குறித்த விஷயம்.

இரண்டாமடியில், மல் அருந்தி(னன்) எனப் பிரியும். மல், என்பது முதலடியிற்றிலுள்ள 'துஞ்சா' என்பதோடுசேர்ந்து துஞ்சாமல் என்ற சொல்ஆகின்றது. பின்வரும் 'அருந்தி' என்பது, அருந்தினன்என்பதன் முதன் நான்கு எழுத்துக்கள்.

மூன்றுமடியில்,மலரும்தி(வாக்கதிர்)எனப்பிரியும். மலரும் என்பது பெயரெச்சம். திவாக் என்பதன் முதல் எழுத்து தி. திவாக் கதிர், என்பதற்குப் பகற்போதில் பிரகாசிக்கும் கதிர் என்பது அர்த்தம்; சூரியனைக் குறிக்கின்றது.

நான்காம் அடியில், மலர் உந்தி, எனப் பிரியும். மலர்போன்ற நாபி என்பது அர்த்தம். இங்கு உந்தி, பெயர்ச்சொல்.

குளப்படி நெய்யடி சிற்கொத்த தோகொள்ளப்
பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோல
மாயவன்றன்
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு
கோட்டிருந்து
குளப்படி யின்னகத் துட்பரல் போன்ற
குவலயமே. 13

பதப்பிரிவு:—குளம் படி நெய் அடிசிற்கு ஒத்ததோ கொள்ள பற்றியதோ குளம் படியில் திங்கள் சேர் அரங்கா கோலம் ஆய அன்று உன் குளம் படி காட்டும் பிறை மறுப்போல் ஒரு கோடு இருந்து குளம்பு அடியின் அகத்துள் பரல் போன்ற குவலயம் ஏ.

அன்வயம்:—குளப்படியில் திங்கள்சேர் அரங்கா, கோலம் ஆய அன்று உன் குளப்படி காட்டும் பிறை மறுப்போல் ஒரு கோட்டிருந்து குளப்படியின் அகத்துள் பரல் போன்ற குவலயம்—குளம் படிநெய் அடிசிற்கு ஒத்ததோ கொள்ளப் பற்றியதோ.

பதவுரை.

குளம் - சந்திரபுஷ்கரிணி என்னும் குளத்தின், படி - படிகளில், திங்கள் - சந்திரனானவன்,(தக்ஷனால் பெற்ற சாபத்தைத் தீர்த்துக்கொள்ளத் தவம்செய்யும்பொருட்டு) சேர்-வந்துசேர்ந்த, அரங்கா - திருவரங்கத்தில் இருப்பவனே,

கோலம் ஆய - நீ வராகம் ஆன, அன்று - அப்பொழுது, உன் - உன்னுடைய, குளம் - நெற்றியின், படி - விதமாகிய வடிவத்தை, காட்டும் - போன்று இருக்கின்ற, பிறை - பிறைச்சந்திரனது, மறுப்போல் களங்கத்தைப்போல், (உன்னுடைய) ஒரு - ஒரு, கோடு-கோரப்பல்லில், இருந்து-இருந்ததும், (பிறகு) குளம்பு - குளம்பு உடைய, அடியின்-உன் காலின், அகத்துள்-உட்புறத்தில், பரல் - பருக்கைக்கல், போன்ற- போன்று இருந்ததும் ஆன, குவலயம்-இந்தப் பூமியானது,

குளம்-வெல்லமும், படி - ஒரு படி அளவு, நெய்-நெய்யும் சேர்த்துச் சமைத்த, அடிசிற்கு - சர்க்கரைப் பொங்கலுக்கு, ஒத்ததோ-சமானமாக இருந்ததோ; (அல்லது) கொள்ள - உன் கையில் எடுக்கத்தான், பற்றியதோ-போதியதா யிருந்ததோ! (இயம்புவாய்.)

விரிவுரை:—ஒருவர் ஒன்றினை உண்பதாயின், அது சுவைக்காகவேனும் அல்லது வயிறு நிறைவதற்காகவேனும் ஏற்றதாயிருக்கவேண்டும். ருசிக்கு மாத்திரம் உண்கின்ற பண்டங்கள் அளவிற் குறைந்திருக்கும்; வயிறுநிறைவதற்கு வேண்டிய உணவு அதிகமாயிருக்கும். "பெருமா, இவ்வுலகினை நீ உண்டது எதற்காக, சுவைக்காகவா, அல்லது உன் வயிறு நிறைவதற்கா?" என்று கவி வினவுகின்றார். அவ் வினாவில் இவ்விரண்டிற்கும் ஆகாது என்னுங் குறிப்பு அடங்கியிருக்கின்றது. மண்ணும் நீரும் கலந்த இந்தக்குவலயம் வெல்லமும்நெய்யும்சேர்த்துச் சமைத்த சர்க்கரைப்பொங்கலோ ஆகாது. ருசிஇல்லாவிட்டாலும் வயிறு நிறைவதற்குத் திருமால் இவ்வுலகை உண்டான் என்று எண்ணவோ இடமில்லை. கையில் எடுக்கக்கூட அவனுக்கு இதுபற்றாதே. அவ்வாறுபற்றாதென்பதற் காதாரமாக எம்பெருமான் வராக அவதாரம் எடுத்து, இரணியாக்ஷனால் கடலில் கொண் டொளிக்கப்பெற்ற இந்தப் பூமியைமீட்டுத் தன் மருப்பில் தாங்கிவந்தபோது,அவ்வராக உருவத்தின்முன் இப்பூமியின் அளவு எத்துணைச் சிறியதாய்த் தோன்றிய தென்பதை இச்செய்யுள் காட்டுகின்றது. பிறைச் சந்திரனது நடுவில் களங்கம் எப்படிக் காண்கின்றதோ, அப்படியே இக் குவலயம் அவ் வராகத்தின் மருப்பில் தூசி படிந்திருந்தது போல் தோன்றியதாம். பல்லில் படிந்த ஒரு தூசியைத்தின்று வயிறு நிறைந்தாருண்டோ! அதுவுமன்றி, இப்பூமியைக் கொண்டுவந்து வைத்துவிட்டு அவ்வாதிவராகம் நின்றபோது, அதன் பாதத்துக் குளம்பிற்குள் ஒரு பருக்கைக் கல்லளவிலேயே, பூமி கிடந்தது. அந்தக் கல்லைத்தின்று வயிறு நிறையுமோ! ஆதலின், திருமால் வையமுண்டது, உலகத்தவர் பிரளயத்திலிருந்து காக்கப்பெறுவதற் கல்லாமல், தன்னுடைய நலங்கருதி அன்றென்பதை இவ்வண்ணம் அழகாகக் கவி விளம்புகின்றார்.

விளக்கம்:—'குளப்படி' என்னும் யமக வெழுத்துக்கள், முதல் மூன்று அடிகளிலும், குளம் படி, என்ற இரண்டு சொற்களாகவே பிரியும். முதல் அடியில் குளம் வடமொழி; வெல்லம் என்பது அர்த்தம். படி, எட்டாழக்குக் கொண்ட அளவை. இரண்டாவது அடியில், குளம் - நீர்நிலை, படி - குளத்திற்கு இறங்கும் படி. மூன்றுவது அடியில், குளம், வடமொழி, நெற்றி என்பது அர்த்தம். படி, அப்படி இப்படி என்பதிற்போல, விதம் அல்லது தன்மை என்ற பொருளுடையது. குளப்பட்டி காட்டும், என்பதற்கு 'நெற்றியைப்போல் இருக்கும்' என்பதுபொருள். திருமாலினது நெற்றிக்குப் பிறைச்சந்திரன் உவமையாகின்றது. உருவத்திலும் ஒளியிலும் பிறைச்சந்திரன் போன்று வராகத்தின் தந்தம் இருக்கின்றது.எனவே, பிறையில் இருக்கும் மறுவினுக்கு அந்தத் தந்தத்தில் தாங்கிவரப்பெற்ற பூமி சமானமாயிற்று.

நான்காவது அடியில், குளம்பு அடி, எனப்பிரியும். காலின் குளம்பு என்பது பொருள்.

இலக்கணம்.

நிலைமொழி யிறுதியிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்து இருக்கும் சொற்கள் புணரும்போது உடன்படுமெய் வந்து அவைகளின் ஒலியைப் பொருந்தும்படி சேர்த்துவைக்கின்ற விதங்களைக் கூறி வந்தோம்.

நிலைமொழியிறுதியில் இ ஈ, ஐ, என்ற மூன்று உயிரெழுத்துக்களில் ஏதாவதொன்று இருக்க, வருமொழி முதலில் பன்னிரண்டு உயிரில் எதுவானாலும் வருமாயின், யகர உடம்படுமெய் வரலாகும்.

நிலைமொழி இறுதி ஏ என்ற உயிராயின், வருமொழி முதலில் எந்த உயிர் வரினும், யகர உடம்படுமெய்யாவது வகர உடம்படுமெய்யாவது வரலாகும். எப்பொழுது யகரம் வருமென்றும், எப்பொழுது வகரம் வரும் என்றும் முன்னர் விளக்கியிருக்கின்றோம்.

நிலைமொழியிறுதியில்; முன் சொன்ன, இ ஈ ஏ ஐ என்றவைகள் தவிர மற்ற உயிர்கள் இருக்க, வருமொழி முதலில் எந்த உயிரெழுத்து வந்தாலும் வகர உடம்படுமெய் வருமென்று கூறினோம்.

ஆயினும் நிலைமொழி யிறுதியில் இருப்பது உகரமாயின், வருமொழி முதல் உயிரோடு அது புணரும்போது வகர உடம்படுமெய் பெறுவதும் உண்டு; பெறாது வேறுவிதமாய்ப் புணர்வதும் உண்டு. ஆதலினாற்றான் உகரத்தைப்பற்றி ஒன்றுங் கூறாது இதுவரையில் விட்டுவைத்தோம். இனி இவ்வுகரப்புணர்ச்சிக்குரிய சிறப்புவிதிகளைக் கற்போம்.

நிலைமொழியிறுதியில் இருக்கும் 'உகர உயிர் என்னாது 'உகரம்' என்று மாத்திரம் கூறுவதற்குக் காரணம் இருக்கிறது.உ என்னும்அவ்வெழுத்து இரண்டு விதமாக ஒலிக்கக்கூடும். ஒன்று வாயைக்கூட்டி உச்சரிக்கப்பெறுவதாய் ஒரு மாத்திரை கொண்டு ஒலிப்பது. உலகம், குழந்தை, என்ற சொற்களிற்போல் முதலிலும்,மருட்சி,தொகுதி என்ற சொற்களிற்போல் இடையிலும்; தெரு, மடு கதவு என்ற சொற்களிற்போல் கடையிலும் நின்று உயிர்க் குற்றெழுத்திற்குரிய ஒரு மாத்திரையுடன் உச்சரிக்கப் பெறுகின்ற இவ்வுகரங்களுக்கு முற்றியல் உகரம், என்று பெயர்.

மொழிக்கு இறுதியிலேயேநின்று, ஆறு அஃது முரசு உப்பு வண்டு வெள்கு,என்பனபோல் க் ச் ட் த் ப் ற் என்னும் வல்லின மெய்யின்மேல் ஏறி இருக்கும் உகரம், வாயை முற்றிலுங் கூட்டப்பெறாமல், அரைமாத்திரை அளவேகொண்டு உச்சரிக்கலாகும். இந்த உகரத்திற்குக் குற்றியலுகரம் என்று பெயர். முற்றிய லுகரத்தைப்போல், குற்றியலுகரம் உயிரெழுத் தன்று. இது உயிரெழுத்தின் சிதைவுபோல்வது. இது, நெடிற்றொடர்,ஆய்தத்தொடர்,உயிர்த்தொடர், வன்றொடர் மென்றொடர், இடைத்தொடர் என்று அறுவகைத் தொடர்க் குற்றியலுகரங்களாகும். இன்னவைகளின் இலக்கணத்தை முன் (6-வது வால்யூம், பக்கங்கள், 145, 163, 183) விரிவாகக் கூறியிருக்கின்றோமாகையால் அதனை இப்பொழுது ஒருமுறை எடுத்துப் படித்துத் தெளிந்துகொண்டால் மேல்வருவனவற்றைக் கற்பது எளியதாகும்.

கலித்தொகை

[803-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 34

தன்னை ஆற்றிஇருக்குமாறு தோழி வற்புறுத்தியும், "ஆயிழாய், நம்காதலர் வருவேம்என்று கூறிச்சென்ற காலம் இதுவன்றோ?" என்று கூறி வருந்திய தலைவிக்குத் தோழி, "துன்பங் கொள்ளாதே, அவர் வந்து விட்டார்" எனத் தலைவன் வரவுணர்ந்து அவளை மீண்டும் ஆற்றுவித்ததைக் கூறுவது இச்செய்யுள்.

மடியிலான் செல்வம்போன் மரனந்த வச்செல்வம்
படியுண்பார் நுகர்ச்சிபோற் பல்சினை மிஞிறார்ப்ப
மாயவண் மேனிபோற் றளிரீன வம்மேனித்
தாய சுணங்குபோற் றளிர்மிசைத் தாதுக
மலர்தாய பொழினண்ணி மணிநீர கயநிற்ப
வலர்தாய துறைநண்ணி யயிர்வரித் தறல்வார
நனியெள்ளுங் குயிலேக்கி யினைபுகு நெஞ்சத்தாற்
றுறந்துள்ளா ரவரெனத் துனிகொள்ள லெல்லாநீ

வண்ணவண் டிமிர்ந்தானா வையைவாருயரெக்கர்த்
தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ
கண்ணிலா நீர்மல்கக் கவவிநாம் விடுத்தக்கா
லொண்ணுதா னமக்கவர் வருதுமென் றுரைத்ததை

மல்கிய துருத்தியுண் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ
வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கா
லொளியிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை

நிலனாவிற் றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்காற்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை

எனவாங்கு

உள்ளுதொ றுடையுநின் னுயவுநோய்க் குயிர்ப்பாகி
யெள்ளறு காதல ரியைதந்தார் புள்ளியற்
காமர் கடுந்திண்டேர்ப் பொருப்பன்
வாய்மை யன்ன வைகலொடு புணர்ந்தே

(தரவு)

(வரி-1-8) மடி இலான் செல்வம் போல் - சோம்பல் இல்லாதவனது செல்வம் பொலிவுறுமாறு, மரன் நந்த - மரங்கள் (பூக்களால்) பொலிவுறவும், அ செல்வம் படி உண்பார் - (அங்ஙனம் முயன்று பெற்ற) அச்செல்வத்தை (வருந்தாது தாம்) படியாகப் பெற்று உண்பாரது, நுகர்ச்சிபோல் - அனுபவம் போல, பல் சினை மிஞிறு ஆர்ப்ப - (அம்மரங்களின்) பல கிளைகளிலுள்ள (அப்பூக்களில் இருக்கும் தேனை உண்டு) வண்டுகள் ஒலி செய்யவும், மாயவள் மேனிபோல் - மாமை நிறத்தையுடையவளது நிறத்தைப் போல, தளிர் ஈன - (மரங்கள்) தளிர்களை விடவும், அ மேனி தாய சுணங்குபோல் - அந்த மாமை நிறத்திலே பரந்த தேமலைப்போல, தளிர்மிசை - அத் தளிர்களின் மீது, தாது உக-மகரந்தப் பொடிகள் சிந்தவும், மலர் தாய பொழில் நண்ணி-அம் மலர்கள் பரந்த சோலையை அடைந்து, மணி நீர கயம் நிற்ப-பளிங்குபோலும் நீரினை உடையனவாகிய குளங்கள் (வற்றாமல்) நிற்கவும், அலர் தாய துறை நண்ணி - மலர்கள் பரந்த துறைகளை அடைந்து, அறல் அயிர் வரித்து வார - நீர் நுண்மணல்களை அழகு செய்து ஒழுகவும், நனி எள்ளும் குயில் நோக்கி - (இவற்றால் வருந்துவதோடு அமையாமல் இவற்றின் மேலும்) அதிகமாக இகழும் குயிலைப் பார்த்தும், இனைபு உகு நெஞ்சத்தால் - வருந்தி அழியும் மனத்தால், அவர் துறந்துள்ளார் என - தலைவர் நம்மைத் துறந்து இனி நினையார் என்று கருதி, எல்லா நீ துனி கொள்ளல் - தோழி, நீ துன்பத்தைக் கொள்ளாதே!

நந்த, ஆர்ப்ப, ஈன, உக, நிற்ப, வார, நோக்கித் துனி கொள்ளல் என முடிக்க:

இளவேனில் வருமளவும் கூவாதொழிந்த குயில் அக்கால வரவின்கண் கூவியது தலைவியின் மொழிக்குத் தோற்று அடங்கி இருந்து பின் அவள் பிரிவுத்துன்பம் உற்ற அக்காலத்தே அவளை நோக்கிப் பழம்பகையால் நனி எள்ளியது போன்றிருக்கின்றது.

(தாழிசை)

(வரி 9 - 12) ஒள் நுதால் - ஒளி பொருந்திய நெற்றியையுடையவளே, நிலா - (நாம் நிறுத்தின அளவில்) நில்லாவாய், கண் நீர்மல்க - கண்கள் நீரால் நிரம்ப, கவவி நாம் விடுத்தக்கால் - (கையாலே) தழுவி அவரை நாம் விட்டபொழுது, நமக்கு அவர் வருதும் என்று உரைத்ததை - நமக்கு அவர் வருவேம் என்று உரைத்த காலம், வண்ண வண்டு இமிர்ந்து - நிறத்தையுடைய வண்டுகள் ஒலித்து, ஆனா - (இன்பம்) நீங்காத, வையை வார் உயர் எக்கர் - வையை யாற்றின் நீண்ட உயர்ந்த மணல் மேட்டில், தண் அருவி நறு முல்லை - குளிர்ச்சி பொருந்திய அருவிநீராலே வளர்ந்த மணம் பொருந்திய முல்லைப் பூவின், தாது உண்ணும் பொழுது அன்றோ - தாதை உண்ணும் இவ்விளவேனிற் காலமன்றோ!

உரைத்ததை-திரிசொல்

(வரி 13 - 16) ஒளி இழாய் - ஒளிபொருந்திய அணிகளை அணிந்தவளே, வினை - (நீர் கைக்கொண்ட) காரியம், வலன் ஆக என்று - வெற்றி பெறுவதாக என்று கூறி, வணங்கி நாம் விடுத்தக்கால் - அவரைத் தொழுது நாம் விட்டபொழுது, நமக்கு அவர் வருதும் என்று உரைத்ததை - நமக்கு அவர் வருவேம் என்று கூறிய காலம், மல்கிய - (வளம்) பொருந்திய, துருத்தியுள் - ஆற்றிடைக் குறையிலே, அவர் மகிழ்துணை புணர்ந்து - அவர் தம்மை விரும்பும் பரத்தையரைக்கூடி, வில்லவன் விழவினுள் - கரும்புவில்லையுடைய காமனுக்கு நிகழ்த்துகின்ற திருவிழாவிலே, விளையாடும் பொழுது அன்றோ - அவர் விளையாடும் இவ் விளவேனிற் காலமன்றோ.

ஆற்றிடைக் குறையாவது ஆற்றின் இடையிலுள்ள தீவு; இதனை அரங்கம் என்பர்.

(வரி 17-20) சுடர் இழாய் - விளங்குகின்ற அணிகளை அணிந்தவளே, பல நாடும்-(இறந்து போவோமோ ஆற்றி இருப்போமோ என்று) பலவற்றை ஆராயும், நெஞ்சினேம் - மனத்தை உடையோமாய், நாம் பரிந்து விடுத்தக்கால் - நாம் வருந்தி அவரை விட்டபொழுது, அவர் நமக்கு வருதும் என்று உரைத்ததை - அவர் நமக்கு வந்துவிடுவேம் என்று கூறிய காலம், நிலன் நாவில் திரிதரூஉம் - நிலத்திலுள்ளார் நாவிலே வழங்கும், நீள் மாட கூடலார் - நீண்ட மாளிகைகளையுடைய மதுரையிலுள்ளவர், புலன் நாவில் - அறிவினையுடைய (சான்றோர்) நாவில், பிறந்த சொல் - உண்டாகிய பாடல்களின், புதிது உண்ணும் பொழுது அன்றோ-புதுமையை அனுபவிக்கும் இவ் விளவேனிற் காலமன்றோ!

நிலன் : இடவாகுபெயர்,

புலன் என்பது கல்விப் பயனாகிய அறிவுடைமை. அதனால் மகிழ்ச்சி பிறத்தலை-'செல்வம், புலனே, புணர்வு, விளையாட்டு என்று அல்லல் நீத்த உவகை நான்கே' (மெய்ப்பாட்டியல் 11) என்பதனால் அறிக.

சொல்-கருவியாகுபெயர்.

(தனிச்சொல்)

என - என்று சொல்லி, ஆங்கு - அசை

(சுரிதகம்)

(வரி 22 - 25) உள்ளுதொறு உடையும் - தம்மை நினைக்கும் பொழுதெல்லாம் நெஞ்சழியும், நின் உயவு நோய்க்கு - நினது வருத்தத்தையுடைய காம நோய்க்கு, உயிர்ப்பு ஆகி - இறப்பைச் செய்வதாகி, புள் இயல் - பறவையினது (பறத்தல்) தன்மையை உடைத்தாகிய, காமர் கடுந்திண் தேர் - அழகிய கடிய வலிய தேரையுடைய, பொருப்பன் வாய்மை அன்ன - பொதிய மலையினையுடைய பாண்டியனது தப்பாத மொழியினையொத்த, வைகலொடு புணர்ந்து - (குறித்த எல்லை தப்பாத) நாளோடு கூடி, எள் அரு காதலர் - நம்மை இகழ்ந்திருத்தல் நீங்கின அன்பர், இயைதந்தார் - நம்மைக் கூடுதலைச் செய்தார்.

உயிர்ப்பு—இறத்தல். இதனை 'உயிர்ப்பதும் ஓம்பி ஒன்றும் உரையலை' என்னும் சிந்தாமணி அடியால் அறிக. (1989

யாப்பிலக்கணம்

[799-வது பக்கத் தொடர்ச்சி]

வண்ணம்

ஒரு செய்யுளில் அமையுஞ் சீர்கள் பெரும்பாலும் உதாரண வாய்பாட்டிற் கியைந்து சந்தங் குறையாது அடிதோறும் ஒத்து அமையுமாயின், அச்செய்யுள் வண்ணப்பா அல்லது சந்தக் கவி என வழங்கப்படும். அது பின்வருமாறு அமைந்து நடக்கும்.

வரலாறு

1. பாணூர் மொழிநிறை - தானா தனதன
சோணா சலரடி - தானா தனதன
பேணா தவனுறும் - தானா தனதன
மாணா நரகமே.—தானா தனதன

இவ்வஞ்சித்துறை, தானா தனதன என்னும் தேமா கருவிளா வாய்பாட்டிற்கியையச் சீர்கள் அமைந்து வந்தமை காண்க.

தனன தானன தந்தனா :

2. நரக வாதையில் வன்பிறார்
தரணி மீதொரு கொன்பெறார்
சுரரு லோகமு மின்புறார்
அருணை நாயக ரன்பறார்.

இவ் வஞ்சிவிருத்தம், தனன தானன தந்தனா என்னும் புளிமா கூவிளம் கூவிளம் ஆகிய வாய்பாட்டிற் கியையச் சீர்கள் அமைந்து வந்தமை காண்க.

தனதன தனதன தனதன தனதன:

3. சிவசிவ வெனநுவல் செயலுறு மறிவினர்
பவமறு மிருளொடு பலவினை எரிபடும்
அமரரு முனிவரு மவர்தமை விழைகுவர்
சமரச நிலையினர் தமரென மருவுவர்
குகனெனும் வலிகொடு கொடியவர் குடிகெட
மகபதி மகிழுற மலைதொறு நிகழ்வரே.

இந்நிலைமண்டில ஆசிரியப்பாவில் தனதன என்னும் கருவிள வாய்பாட்டுச் சீர்களே அமைந்து வந்தமை காண்க.

தானதன தானதன தானதன தானனா :

4. ஆறுமுக நாதனடி யார்களடி பேணுமே
மாறுபடு மாதர்முலை மாயையிடை வீழ்தீயேல்
நீறுதவர் ஞானநிலை யாவுமுறு மாறேதாய்
நாறுமலர் மீதுவளர் நாமகளின் மாதாவே.

இத் தரவு கொச்சகக்கலிப்பா வண்ணம்பெற்று வந்தமை காண்க.

தந்தன தானன தானன தானனத் தாதனனா :

5. செங்கதி ரோசிவ னோவுமை
யோவடற் சீதரனே
ஐங்கர னோகுக னோகுரு
வோவெமக் காதரமாய்
இங்கழி யாதுறு சீர்பெறு
மாறளித் தேசிலரே
தங்கருள் வாரிதி யூடமிழ்
வாகிடத் தாடரலே.

இக்கட்டளைக் கலித்துறை வண்ண வாய்பாடமைய வந்துள்ளமை காண்க. பின்வருவன வண்ண வாய்பாடுகளாம்:—

தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய, தத்தா, தாத்தா, தந்தா, தாந்தா, தனா, தானா, தன்னா, தய்யா.

இவ்வாய்பாடுகளமைய வண்ணப்பாக்களில் சீர்கள் அமைக்கப்படுமென அறிக.

இனித் திருப்புகழ்பாடித் திருப்புகழெய்திய அருணகிரிநாதர் வாக்காகிய குழிப்புச் சந்தக் கவிகளில் சிலவற்றைக் காண்போம்:

வரலாறு

தந்ததனத் தானதனத்—தனதானா:

1. உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

தனனதந்த தத்தத்த தந்த—தனதானா:

2. கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப்ப யின்று
கடையில் வந்து தித்துக்கு ழந்தை
—வடிவாகிக்

கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்து விக்கக்கி டந்து
கதறி யங்கை கொட்டித்த வழ்ந்து
—நடமாடி

அரைவடங்கள் கட்டிச்ச தங்கை
இடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவையணிந்து முற்றிக்கி ளர்ந்து
—வயதேறி

அரியபெண்கள் நட்பைப்பு ணர்ந்து
பிணியுழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று
—பெறுவேனோ

இரவியிந்த்ரன் வெற்றிக்கு ரங்கி
னரசரென்று மொப்பற்ற வுந்தி
இறைவனெண்கி னக்கர்த்த னென்றும்
—நெடுநீலன்

எரியதென்றும் ருத்ரற்சி றந்த
அனுமனென்றும் ஒப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்க்கத்தில் வந்து
—புனமேவ

அரியதன்ப டைக்கர்த்த ரென்றவ்
வசுரர்தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின்
—மருகோனே

அயனையும்பு டைத்துச்சி னந்து
உலகமும்ப டைத்துப்ப ரிந்து
அருள்பரங்கி ரிக்குட்சி றந்த
—பெருமாளே."

குறிப்பு:—குதம்பை - காதணி, அமையும் - போதும், இரவி - சூரியன், உந்தி இறைவன் - திருமாலின் நாபிக்கமலத்தில் தோன்றிய பிரமன், எண்குஇனக்கர்த்தன் - கரடிக் கூட்டத்திற்குத் தலைவனாகிய சாம்பவான், மருகோனே - மருமகனே, புடைத்து - அடித்து.

இச்செய்யுட்களின் ஒவ்வோரடியிலும் ஈற்றில் நிற்கும் சீரைக் குழிப்பு என வழங்குவர். ஆதலின் இவை போல்வன குழிப்புச் சந்தக் கவி எனப் பெயர்பெறும்.

தொல்காப்பியர் முதலிய ஒருசாராசிரியர் வண்ணம் இருபதென வகுத்து, அவற்றுக்கு வேறு விதமாக இலக்கணம் அமைப்பர். அம்முறையினை அடுத்த இதழிற் காணலாம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 9. அயோமுகிப் படலம்.

[793-வது பக்கத் தொடர்ச்சி]

நெடுமால் திருநா டகங்காண் நிசமே.

ஆசையின் வந்த அயோமுகியை அன்னவாறு உகைத்துச் செல்கின்றான் இலக்குவன். இப்பால், இளையோன் திரும்பாமையால் துண்ணென அஞ்சுகின்றது இராமன் மனம். என்னுற்றதுகொல் என இரங்குகின்றான். வெய்ய இக்கானகத்தில் நீர் கிடைத்தல் அருமையாயிற்றோ வென ஐயுறுகின்றான். வேறு காரணம் யாவதாயிருத்தல் கூடுமென அயிர்க்கின்றான். விரைய வர வல்லவன் வாராமையின், தானே அவனை நாடி விரையலுற்றான்.

வான்மீகத்தில் இல்லாததோர் நீர் வேட்கையைக் கம்பர் இராமனுக்கு விளைவித்து அதன்பொருட்டு இலக்குவனைப் பிரியச்செய்து, அயோமுகி அவனைத் தனியே எதிர்ப்படுமாறு புரிந்து, பின்னர் இராமன் அவ் வருமைத்தம்பியைத் தேடும்படி நடத்திய இவ் வேற்றுமையின் பயனாகப் பிறந்த பாசுரங்கள் சில பொருவிலா அவன் புகழிற்குப் பூணென விளங்குகின்றன. இராமன் நினைந்த பல, பன்னிப்பன்னி இனைந்தன பலப்பல—

> நீர்கண் டனையிவ் வழிநே டினைபோய்ச்
> சார்கொண் டெனவித் துணைசார் கிலனால்
> வார்கொண் டணிகொங் கையைவவ் வினர்பால்
> போர்கொண் டனனோ பொருளுண் டிதனால்

[நீ இவ்வழி தேடிச்சென்று தண்ணீர் கண்டு எடுத்து வா என்று நான் சொல்லியனுப்ப, இவ்வளவு காலமாகியும் அவன் திரும்பவில்லை. ஒருகால், கச்சைக்கொண்டு அணிந்திருக்கின்ற கொங்கைகளையுடைய சீதையைக் கவர்ந்து சென்றவர்களோடு போர்செய்யத் தொடங்கினானோ; அவன் காலம் தாழ்த்துவதில் ஏதோ பொருள் உளது, என்று (இராமன் நினைத்தான்)]

இராவணன் எதிர்ப்பட்டனனாயின் பின் இலக்குவன் இராமனது தாகத்தை மறப்பான் திண்ணம்; எனினும் அப்போரில் இவ்விளையோன் இறவாமல் மீள்வது திண்ணமில்லையே என்று துணுக்கமெய்திய மூத்தோன்,

> அஞ்சொற் கிளியன் னவளங் கினைமுன்
> வஞ்சித் தவிரா வணன்வவ் வினனோ
> நஞ்சிற் கொடியா னடலைத் தொழிலால்
> துஞ்சுற் றனனோ விதியின் றுணிவால்

[அழகிய மொழிகளைப் பேசும் கிளிபோன்ற சீதையை முன் வஞ்சித்த இராவணன் இவனையுங் கவர்ந்துசென்றனனோ? சென்று, நஞ்சினும் கொடிய அவ்வரக்கனது வஞ்சனையால், விதியின் உறுதி காரணமாக, இறந்தே போயினனோ]

எனக் கலக்கமுறுகின்றான். விதியை நினைத்து இராமன் இங்கு அஞ்சுவது அத்தனையும் பொருந்தும். தன் முன்னவனைத் திருநாடு இழப்பித்த கைகேசியையும் தயரதனையும் வெகுண்டு, 'பெண்ணுட்ட மொட்டேன் இனி இப்பேருலகத்துள்' என்னு அறைகூவி, கொற்ற மௌலி கவிப்பான் நின்றவவ் விலக்குவன் கதத்தினைத் தணிக்குமாறு இராமன், "மைந்த, விதியின் பிழையே யிது, ஏனையோர் யாவர் பிழையும் அன்று" என்று இயம்பியதற்கு எதிர் இவ்விளையோன், "விதிக்கு விதியாகும் என் விற்றொழில் காண்டி" என விதியின் ஆற்றலைப் பழித்துளானாதலின், அவ்விதிதான் தன் பழம்பழியைத் தீர்த்துக்கொள்ள இன்று இவனை இராவணன் கையில் காட்டித் தந்ததோ வென்று இராகவன் நெடிது நினைந்து மறுகுவான் ஆயினும் ஆகலாம். அன்றியும், விதியும் வல்லரக்கனும் சேராமலே இலக்குவன் உயிர்விடுதற்கோர் காரணம் உளதென உயங்குவானாகி இராமன்,

> வரிவிற் கையெ னருயிர் வந்திலனால்
> தருசொற் கருதே னொருதை யலையான்
> பிரிவுற் றனனென் பதொர்பி ழைபெருத்
> தெரிவுற் றிடவா வியிழந் தனனோ

[கட்டமைந்த வில்லைத் தாங்கிய கையுடைய, என் அருமையான உயிர்போன்ற இலக்குவன் வரவில்லையே. பொன்மானின்பின் போக வேண்டாவென்று அவன்சொன்ன சொல்லை ஏற்றுக்கொள்ளாமல் நான் சீதையைப் பிரியலானேனே என்றவொரு துன்பம் பெருத்து நெஞ்சக் கொதிப்பு அதிகமாக அதனால் உயிர் இழந்தானோ]

எனச் சிந்தை கலங்கினான். மானின் மாயத்தைத் தான் அறிந்து வற்புறுத்தியும், அவ்வறிவிற்கும் மேலாயவோர் அறிவுடையது போன்ற வாசகத்தால், "இல்லாதன இல்லை இளங்குமரா" என்று தன் வாயை அடக்கி இவ்வண்ணம் அவலமாக்கினானே ஒரு முன்னோன் என்பதை நினைத்து உருகிய மனத்துத் தம்பி உயிர்நீத்திருக்கவும் இயலும். இரட்டுற மொழிதலிற் கம்பர் வல்லவராதலின், "மானிது நானே பற்றி வல்லையின் வருவன், கானியல் மயிலனாளைக் காத்தனையிருத்தி' என்று இராமன் சொல்லிச் சென்ற கட்டளையைக் கடைபிடிக்காமல் ஒரு பெண்ணை நான் தனியே விட்டுச் சென்றேனே, அதனாலன்றோ இப்பேரிடர் உற்றது" என்று அத்தனையுந் தன் குற்றமாக் கொண்டு மனம் நொந்து இலக்குவன் உயிர் மாய்ந்தனனோ வென்று இராமன் அஞ்சி வருந்தினானென இச்செய்யுளிற்குப் பொருள் காணவும் அமையும். "ஒரு தையலை" என்ற சொல்லமைப்புப் பின்னைய பொருளிற்கே சாலத் தகும்.

இவ்வண்ணம், "விதியின் துணிவோ, என் பிழை பொறுக்கா எரிவோ, தன் பிழை பொறுக்காப் பிழையோ காரணமா எம்பி உயிரிழந்தான்" என்று நைந்த இராமன் மேலினி யொன்று எண்ணவும் ஆற்றல் அற்றவனாகி, இருளின்வாய் இருந்தேங்கிப் புலம்புஞ் சொற்கள் அவலச்சுவையால் அதிகமும் சிறக்கும்:—

> தள்ளா வினையேன் றனியா ருயிராய்
> உள்ளா பொருநீ யுமொளித் தனையோ
> பிள்ளாய் பெரியாய் பிழைசெய் தனையால்
> கொள்ளா வுலகுன் னையிதோ கொடிதே

[நீங்காத விதியையுடைய என் ஒப்பற்ற அருமையான உயிராகி என் உள்ளே இருப்பவனே, (சீதையன்றி) நீ ஒருவனும் மறைந்தனையோ! வயதில் இளையவனாயினும் அன்பில் பெரியவனே. இவ்வாறு உன்னை ஒளித்துக் கொள்வதால் பெரும்பிழை செய்கின்றாய். இதுகொடிது; உலகம் இதனை ஏற்றுக்கொள்ளாது]

> போரா விடர்வந் தனபேர்க் கவலாய்
> தீரா விடர்தந் தனைதெவ் வர்தொழும்
> வீரா வெனையிங் ஙன்வெறுத் தனையோ
> வாராய் புறமித் துணைவை குதியோ

[நீக்குதற்கரிய பேரிடர்கள் வருவனவற்றை விலக்க வல்லவனே, தீராத இந்த இடரை நீ எனக்குத் தந்தாய். பகைவர்களாலும் தொழப்படுகின்ற வீரனே, என்னை இங்கு வெறுத்துப் போயினையோ; இவ்வளவு நேரம் என்னை விட்டு வெளியில் இருப்பாயோ; வந்துவிடு]

இனி, அவ்விலக்குவன் ஒல்லை வருதலும்வேண்டும்; இல்லையேல் இராமனுயிர் தரித்திராது—

> என்னைத் தருமெந் தையையென் னையரைப்
> பொன்னைப் பொருகின் றபொலங் குழையாள்
> தன்னைப் பிரிவே னுளனா வதுதான்
> உன்னைப் பிரியா தவுயிர்ப் பலவோ

[என்னைப்பெற்ற தந்தையையும், என் தாய்மாரையும், இலக்குமியை ஒத்தவளும் பொன் குழை அணிந்தவளுமாகிய சீதையையும், பிரிந்தேனாயினும் நான் இன்னும் உயிருடன் இருப்பவன் ஆவது உன்னைப் பிரியாத ஆறுதலால் நான் தாங்கியிருக்கும் மூச்சினாலன்றோ]

என்று தன் தம்பியின்பால் வைத்த அளப்பரிய அருமையின் பெருமையை விளம்புவானாகிப் பின்னும்,

> பொற்றோ டிவர்கின் றபொலங் குழையாள்
> தற்றே டிவருந் துதவம் புரிவேன்
> நிற்றே டிவருந் தநிரப் பினையோ
> எற்றே டினைவந் தவிளங் களிறே.

[மாயமானின் பின் நின்சொற் கேளாமற் சென்ற என்னைத் தேடிவந்த இளம் ஆனையை ஒப்பவனே, பொன் தோடு அணிந்த சீதையைத் தேடி வருந்தி அவளை அடைதற்குத் தவம் செய்கின்ற நான் உன்னையுந் தேடி வருந்தும்படி முடித்துவிட்டாயே]

என ஏமுற்று,

> இன்றே யிறவா தொழியே னெமரோ
> பொன்றா தொழியார் புகல்வா ருளரோ
> ஒன்றா கியவுன் கிளையோ ரையெலாம்
> கொன்றாய் கொடியா யிதுவுங் குணமோ

[உன் நிலையை எனக்குச் சொல்வார் இல்லை. ஆதலால், இன்றைக்கே நான் இறவாமல் இருக்கமாட்டேன். அதன் பின் நம்மைச் சேர்ந்தவர்களும் இறவாமல் உயிர் வாழமாட்டார். இப்படி, ஒருமனப்பட்ட உன் கிளைஞரை எல்லாம் கொன்றவனாகின்றாய். இது உனக்குத் தகுமோ]

என்று இலக்குவன்பால் குறையுங் கண்டு, ஏனையோரினும் அவன் அருமையைப் பின்னும் பாராட்டுவானாகி,

> மாந்தா முதன்மன் னவர்தம் வழியில்
> வேந்தா கைதுறந் தபின்மெய் யுறவோர்
> தாந்தா மொழியத் தமியே னுடனே
> போந்தா யெனைவிட் டனைபோ யினையோ

[மாந்தாதா முதல் மன்னவர் வரிசையில் நான் வேந்தனாவதைத் துறந்தபின், என்பால் மெய்யுறவு கொண்டவர்கள் அவரவர் என்னுடன் வராமல் நீங்கவும், என்னுடன் வந்தவனே, நீயும் என்னை இறுதியில் கைவிட்டுப் போயினையோ]

எனத் துயர்கூர்கின்றான். புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீருண்ண வைத்த மாந்தாதாவினால் புரக்கப் பெற்ற அத்தேயத்தில் தனதன்னை கைகேசியும் தானும் ஒன்றிவாழ இயலாமற்போன பரிபவத்தை நினைத்து வருந்தினான் போலும். மெய்யுறவோர், என்றது உண்மை உறவினர் என்று உரைத்ததோ, அல்லது, உடலளவே உறவு கொண்டவர் என்று இழித்ததோ அறிதலருமை. எனினும், இராமனுடன் கானகம் நண்ணமல் நிற்றற்கு நினைத்த உறவினர் ஒருவரும் இலர். இராமனே அனைவரையும் வாராமல் விலக்கினான். இயன்றதாயின் இவ்விலக்குவனையுமே மறுத்திருப்பான், சீதையையும் மறுத்திருப்பான். எனின், "தாம்தாம் ஒழியத் தமியேனுடன் போந்தாய்" என்று இயம்புவது ஏனையோர்க்கு ஒவ்வாத வோர் பழியாம். ஆயினும், இவ்வாறு இராமன் இயம்புதற் கமைதிகாண லருமையன்று. இது இவனுற்றிருந்த கழிபெருந் துயரத்தின் கிளர்ச்சியாம். இலக்குவனது அருமையினைப் பாராட்டுமோர் ஆர்வத்திடையே பிறர்க்குரிய பெருமையினை அளிக்காமல் அயர்ந்தனன், அவ்வளவே. "நற்றாதையும் நீ தனி நாயகன் நீ வயிற்றிற் பெற்றாயும் நீயே பிறரில்லை" என்று ஏனையோர் உறவை யெல்லாம் மறுத்துத் தன்னைக்கொண்டாடிய ஒருதனித் தம்பியை இழந்தக்கால், அவ்வொரு தம்பியின்பொருட்டு இப்பொழுது ஏனையோர் உறவின் மெய்ம்மையைச் சிறிது இராமன் மறந்தானேல், அப்பிழைதான் பொறுத்தற் கரிதாமோ.

இப் பிழையினைப் பொறுத்தற் ககவயின் கம்பர் வேறொரு செய்தியை நிறுத்தற்கு விரைகின்றார். இங்ஙனம்,

> என்னு வுரையா வெழும்வீ ழுமிருந்
> துன்னு வுணர்வோய் வுறுமொன் றலவால்
> மின்னு திடியா திருள்வாய் விளைவீ
> தென்னு வெனுமென் றனிநா யகனே

[என்று கூறி எழுந்திருப்பான், விழுவான், இருந்தபடியே, பல எண்ணி உணர்வு ஒழிவான். இன்னவாறு அவன் செய்தன பல. மின்னுமலும் இடிக்காமலும் இவ் விரவில் இப்படியும் விளைந்ததோ என்பான். இவன் யாரெனில்—என் ஒப்பற்ற நாயகனே]

என்ற கவிக்கூற்றில், இராமன் தன் தனிநாயகனாகுந் தன்மையைக் கம்பவர் இவ்வயின் நினைவுசெய்ய நினைத்தது சாலத் தக்கதே. இராமன் ஓர் மானுடனேயாயின் தம்பியை யிழந்து புலம்பும் நாடகம் இவ்வாறு நடிக்கப்பெறும் என்பதல்லால், தம்பியென்றும் அவனை யிழந்தானென்றும் இழந்து வருந்தினனென்றும் விளம்புவதால், நெடுமால் அல்லனோ இவ்விராமன் என்று சிலர் ஐயுறுவண்ணம் காப்பதற்கு வந்ததோர் பாசுரமே யிது. இனி மூன்று செய்யுள்களுக்கப்பால் அவனைத் 'திருமால்' என்றே அழைப்பதற்கிருக்கின்றனர். இந்த இரகசியம் தனக்கே தெரியும் என்ற மனத்தினாலோ, நம்மனோரையும் உளப்படுத்தி, 'எந்தனி நாயகன்' என்னாமல் தனக்கே இங்கு அவனைத் தனிநாயகன் ஆக்கிக்கொண்டனர்? கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் இதனை அறியும் சிறிது.

அன்னதோர் தனி நாயகன், இன்னும், பற்பல இடங்களிற் சென்று தேடியும், தம்பியின் பெயரைச் சொல்லிச் சொல்லி அழைத்துச்சோர்ந்து மயங்கியும், எங்குங் காணாமையின்,

> கமையா ளொடுமென் னுயிர்கா வலினின்
> றிமையா தவனித் துணைதாழ் வுறுமோ
> சுமையா வுலகூ டுழறுல் வினையேன்
> அமையா துகொல்வாழ் வறியே னெனுமால்

[பொறுமையுடைய சீதையோடு என் உயிரையும் பாதுகாத்து இரவும் பகலும் உறங்காமல் நிற்பவன் இத்தனை காலம் தாமதிப்பானோ. உடல் சுமையாக இவ்வுலகத்தில் திரிகின்ற பழவினையுடையேன், இது செய்ய அமையாதோ, அறியேனே - என்பான்]

எது செய்தல் அமையாதோ வென்று அறியானாய் அயிர்த்தனன்? அவன் துணிவினையும் அதன் முடிவினையும் அடுத்த செய்யுள்கள் காட்டும்:—

> அறப்பா லுளதே லவன்முன் னவனாய்ப்
> பிறப்பா னுறின்வந் துபிறக் கவென

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மட பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்யப்பட்டது) I.D.L. ஸ்பெஷல் மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மட ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்த சிற்றாமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

REG. NO. M. 2324.

மறப்பால் வடிவாள் கொடுமன் னுயிரைத்
துறப்பா னுறுகின் றதொடர்ச் சியின்வாய்

[என் நல்வினை ஊழ் இருக்குமாஞல், அவன் தமையஞகவந்து பிறக்கக்கூடுமாயின் பிறக்கக்கடவேன், என்று கொடுமை வாய்ந்த கூரிய வாள்கொண்டு தன் நிலைபெற்ற உயிரைப் போக்கிக்கொள்ளத் தொடங்குஞ் சமயத்தில்-]

போந்தா னெடுமா யையினிற் பிரியா
வீர்ந்தா னவணு சிபிடித் திளையோன்
சோர்ந்தா ளிடுபூ சல்செவித் துளையிற்
சேர்ந்தார் தனுமே திருமா றெருளா

[இளையோன் அயோமுகியின் மாயையிலிருந்து விடுபட்டான். விடுபட்டு அவள் மூக்கைப் பிடித்து அறுத்தான். அதஞல்சோர்ந்த அவள் இட்ட பேரொலி தன் காதுகளிற் பட்டவுடன், திருமால் மனந்தேறி......அக்கினி அத்திரத்தை எடுத்துச் சுழற்றிஞன்]

தம்பியின் பிரிவிற் காற்ருமல் தற்கொலை செய்துகொள்ளத் துவக்கியது கம்பர்தம் தனி நாயகன் என்னின், அரக்கியிடு பூசல் கேட்டுத் தெருண்டது திருமால். மூவராய் முதல்வராகி மூலமதவாகிய அவ்வொரு ஆதியந்தமற்று எங்கு மயமாய பொருள் வடிவாள் கொண்டு தற்கொலை செய்துகொள்ளத் துணியலாயிற்றே. இதனை யாரிடத்துரைத்து நகையாடுவோம். இறக்கத்தான் இபைந்தான் என்ருல் மீண்டு பிறக்குமோர் நசையும் உளன். இப்பிறப்பில் இழந்தாலும் மீண்டும் இலக்குவனையே தன் உடன்பிறப்பாகப் பெறப்பெற வேண்டுகின்ற இவ்வேட்கை இணையற்ற இரக்கத்தைத் தூண்டவல்லது. மீண்டும் அவனுக்குத் தான் முன்னவஞகவோ, அல்லது, தான் தம்பியாய் நின்று பண்டைக் கடன் செலுத்தும் வண்ணம், அவன் தனக்கு முன்னவஞகவோ திருமால் பிறப்பான் வேண்டினன். இரண்டு நினைவிற்கும் இடங்கொடுக்கும் இச்செய்யுள். எனினும், வாள்கொண்டு இறப்பான் போலும் ஊழ்கொண்டு பிறப்பான் போலும் பேசுமிதஞல், ஆதியம் பொருளல்லனே இவ்வொரு இராமன் என்று எம்மனேர் உள்ளம் திகைக்காவண்ணம், அவன் திருமாலே என்று கம்பர் மிகவிரைந்து தெருட்டுகின்றனர். பின் பிரம்மாத்திரத்திற்கு உடைந்து கிடந்த இத்தம்பியை, கல்லும் புல்லும் கரைந்துருகக் கட்டியழுத அந்நாள், அவனைநோக்கி, "மனிசன் என்றே இது மாயம் போன்றதில்லை ஆஞடையாய் பொய்யும் புகலப்புக்காயோ" என்று வினவிய அமரர்களோடு நாமும் இன்று இராமனை வினவவேண்டியவர்களாகின்றேம்.

வர்த்தமானம்

விதவை மணமும் கன்னியர் நிலையும்:—இந்தியாவில் சென்ற சிலவாண்டுகளாக விதவைகளின் மணம் அதிகமாக நடந்து வருகின்றதென்றும் அதஞல் பல கன்னியர் கல்லியாணமாகாமலிருக்க நேரிட்டுளதென்றும் ஒரு செய்திவெளியாயிருக்கின்றது. இந்தியநாட்டுப் பெண்மக்களின் நிலை சீர்குலையாதிருக்கவேண்டுமெனில் ஒவ்வொரு மனிதனும் இனிஇரண்டு மூன்று கன்னிப்பெண்களை மணந்துகொள்ளவேண்டுமென்று ஓர் வடநாட்டுப் பத்திரிகை கூறுகின்றது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ∴ Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.
Life Assurance is security—
for the policyholder from an investment point of view.
for the policyholder and after him for his wife and children.
Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000
For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta
For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

செட்டிநாட்டுக்

கலா நிலயக் கல்விக் கழகம்.

இக் கழகத்தின் அடுத்த வகுப்பு காஞடு காத்தானில் பிப்ரவரி மாதம் 17, 18-ந் தேதிகளில் கூடும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை.)

அவ்விரு தினங்களிலும் மாலை 6 மணிக்குக் காரைக்குடியில், S. M. S. ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர், B.A., B.L., அவர்கள் கம்பராமாயணக் கட்டுரைகள் நிகழ்த்துவார்.

மனித முயற்சி:—சீதோஷ்ண ஸ்திதியை மனித முயற்சியால் மாற்றிவிடுவதற்கு, பிரான்ஸ் பிரிட்டன் பெல்ஜியம்முதலிய நாட்டுப்பூதபௌதிக ஆராய்ச்சியாளர் முயற்சிசெய்துவருகின்றனராம். கோடைகாலத்தில் உஷ்ணத்தைத் தணிக்கும்பொருட்டுச் சேர்க்கை மூடுபனியை உண்டாக்கிவிட அந்நாட்டு அறிஞர் முயல்கின்றனராம். இது செய்யப்பெறின் கோடையில் இரவில் காற்றுக்கென பங்கா முதலிய விசிறிகளால் ஏற்படும் செலவு குறையும் என்று எல்லோரும் இச்செயர்க்கை மூடுபனி வேலையின் முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனராம்.

அமிர்தசாகரம்
தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய
ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0
இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)